
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| மலர்: 13<br>இதழ்: 3 | பிலவ ஹு ஆனி மீ<br>ஜூன்—ஜூலை '61 | வருட சந்தா<br>ரூ. 3-00 |
|---|---|---|

முதுவேதியரால் தடுத்தாளப் பெற்ற சுந்தரர்

பக்கம் 100

## உள்பொருள்

| | பக்கம் |
|---|---|
| ஒன்றே ஒன்றுதான் (திருப்புகழ்மணி) ... | 97 |
| தடுத்தாட் கொண்ட அருள் (கி. வா. ஜகந்நாதன்) ... | 100 |
| திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... | 107 |
| குமாரஸ்தவ விளக்கவுரை (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... | 118 |
| அகத்தியர் (தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை) | 123 |
| அரிதாகிய மெய்ப்பொருள் (கி. வா. ஜ.) ... | 129 |
| தாம்தாம் செய்த வினை (ரஸபதி) ... | 134 |
| COSMOS AND LIFE (*Thirūppugal Mani*) ... | 144 |

---

### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரு. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரு. 14.

மலேயா. ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

---

**குறிப்பு :** *முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரு. 1.*

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : முத்துஸ்வாமி

| | | |
|---|---|---|
| மலர் 13 | பிலவஞ ஆனிமீ<br>ஜூன்-ஜூலை—1961 | இதழ் 3 |

## ஒன்றே ஒன்றுதான்

(திருப்புகழ் மணி)

தெய்வம் என்பது ஒன்றுதான். அந்தத் தெய்வத்தின் ரூபங்கள் பல உருவாயும், அருவாயும் எங்கும் நிறைந்திருப்பதே தெய்வத்தினியல்பு. உருவமும், அருவமும் வேறு வேறல்ல. உருவத்தினுள் பேசுவது அருவமே. உள்ளே யிருக்கும் கோபம், தாபம், மகிழ்ச்சி முதலியவனைத்தும் உருவத்தின் மூலமாகத் தான் வெளிப்படுகின்றன. உருவமில்லாமல் அருவம் தனக்குள் ஒன்றிருப்பதை உணர்வதே திருப்புகழ் பாடுவதனல் அடையும் பயன். "எனக்குள் ஒன்றி யிருக்கும் தெய்வமே எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் ஒன்றி யிருக்கிறது. அவ்வாறு ஒன்றி யிருக்கும் பொருளே தெய்வம்" என்று அறிவதே பிரம்ம ஞானம். இதையே,

---

நல்லார்க்கு நற்பண்பு போதிக்கும் நாகரிகம்,
கொல்லர்முன் ஊசிவிலை கூறுவது போலாமே.

" ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே அநாதியானது ஒன்றுமே
கன்னல் நின்ற செம்பொனைக் களிம்பறுத்து நாட்டிலுள்
அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயவே "

என்று சித்தர் பாடி விட்டார்.

தெய்வம் ஒரு காலத்தில் இருந்து ஒரு காலத்தில் இல்லாம லிருக்கும் பொருளல்ல. எப்பொழுதும் இருக்கப்பட்ட பொருள். அது கரும்புபோல் சுவைமயமாயும், ஆனந்தமாயும் இருக்கிறதாம். (கன்னல் - கரும்பு.) பொன்னுக்குப் பொன்னுகவும், அமிருதத்திற்கு அமிருதமாயும், ருசிகரு ருசியாயும் இருக்கப்பட்ட அந்தத் தத்துவமே உலகமுழுவதிலும் ஒன்றிக் கொண்டு ஒன்று யிருக்கிறது. அதை இதயத்தில் காட்ட வேண்டும். வேற்றுமையாகிய அழுக்கைப் போக்கிவிட்டால் இதயம் கண்ணாடி போலாய்விடும். நீ வேறு நான வேறு எனற வேற்றுமை நீங்கித் தெளிவடைந்த இதயத்தில் மூனறு இயல்புகள் உண்டாகும். தெய்வத்தைப் பார்க்கும் தன்மை, அதை உணரும் தன்மை, அதனுடன் ஒன்றாய்க் கலக்கும் தன்மை ஆகிய மூன்றுமே அந்த இயல்புகள். இம் மூன்று இயல்புகளையும், அவற்றின் பயன்களையும் நாம் பெறுவதனல் தமிழ் ஞானத்தைப் பெறுகிறோம். தமிழ் முனிவர் போற்றும் ஞானமே தமிழ்ஞானம். அந்த ஞானந்தான் பிரம்ம ஞானம்,

---

பண்பிருந்த ஆடவர்கள், பாவையரைத் தாயரெனக்
கண்டிருந்து, ஆத்மசக்தி கைவல்யம் ஆயினரே.

தமிழை முத்தமிழென்றனர். இயல், இசை, நாடகம் என்னும் மூன்ருய்த் தன்னுள் ஒன்ரு யிருப்ப தெதுவோ அதுவே முத்தமிழ்.

பிரம்மமும் உலகத்திலே இயல்பாக நிறைந்திருக்கிறது. உயிர்களில் இசையாக இசைந்துள்ளது. தானும் இசைந்து அவ்வுயிர்களையும் இசைவிக்கிறது. ஒன்ருயிருககும் அது பல ரூபங்களாகி நடித்துக் காட்டுகிறது. இந்தப் பிரம்மத்தினுடைய மகிமையே தமிழினது மகிமை. தமிழைப் போற்றுவது பிரம்மத்தைப் போற்றுவதாகும். தமிழென்பது ஓங்காரம். ஓங்காரப் பொருளா யிருப்பது பிரம்மம்.

" கொன்றைச் சடையர்க் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே "

என்ருர் அருணகிரியார்.

செந்தமிழ் நாளுமோதி உய்ந்திட ஞானமூறும் செங்கனி வாயாம் முருகன்வாய். உலகத்துயிர்களெல்லாம் உய்ந்திடுவதற்காக ஓங்காரத்தின் பொருளை ஓதுகிருனும் சிவனுக்கு. அதனுல் அவன் வாயில் எப்பொழுதும் சிவஞானம் ஊறிக்கொண் டிருக்கிறதாம். அவன் கரும்புபோல் சுவையாகவும், பொன் போல் ஒளியாகவும் எங்கும் ஒன றியிருந்து உலகத்தை இயக்குகிருனை. அந்த கருணைகரனுகிய முருகனுடைய புகழை நாமும் பாடிக் கொண்டே யிருப்போம்.

---

தேசத் துரோகிகள்தாம் வாழ்வதுபோல் தோன்றிடினும் நாசமாய் அந்தத்தில் நைவதுவும் கண்டாமே.

சுந்தரர் வரலாறு-3.

## தடுத்தாட் கொண்ட அருள்

[கி. வா. ஜகந்நாதன்.]

திருமண நாள் வந்தது. ஆரூரர் திருமஞ்சனம் செய்து கொண்டு ஆடை அணி அணிந்து திருமணக்கோலம் கொண்டார். யோகப் புரவியில் ஏறிக்கொண்டு உறவினரும் பிறரும் சூழ மங்கல வாத்தியம் முழங்கத் திருநாவலூரி லிருந்து பெண் உள்ள ஊராகிய புத்தூருக்கு வந்தார். இந்தத் திருமண ஆரவாரத்தோடு பெருங்கூட்டம் புத்தூருக்கு வந்தமையால் அன்று முதல் அவ்வூருக்கு மணம் வந்த புத்தூர் என்ற திருபெயர் வழங்க லாயிற்று.

புத்தூரில் உள்ளவர்கள் மாப்பிள்ளை வருவதை அறிந்து ஊரெலலாம் அலங்கரித்திருந்தார்கள். நிறைகுடம், தூபம், தீபம், பாலிகைகள் ஆகியவற்றை ஏந்தினார்கள். மலரையும் அறுகையும் சுண்ணத்தையும் தூவினார்கள். பொரியை வீசினார்கள். சந்தனப் புனலைத் தெளித்தார்கள். இவ்வாறு அந்தணாளர்கள் திருமணக் கூட்டத்தை எதிர்கொள்ள வந்தார்கள்,

சுந்தரர் மணப்பந்தருக்கு அருகில் வந்து இறங்கினார். அப்பொழுது இறைவன் அப்பெருமானைத் தடுத்தாட் கொள்வதாக அருளிய செயலை நிகழ்த்தப் புக்கான். அவன் ஒரு கிழவேதியராகக் கோலம் பூண்டு எழுந்தருளி வந்தான்.

திருமணப் பந்தருக்குள் புகுந்து அம்முதியவர், "இங்குள்ள யாவரும் யான சொல்லப் போவதைக் கேளுங்கள்" என்று சொன்னார். அங்கிருந்த அந்தணர்களும் சுந்தரரும், அந்த முதியவரை நோக்கி, "நும் வரவு நல்வரவாகுக! நீங்கள் சொலல வேண்டியதைச சொல்லுங்கள்" என்றனர்.

---

கொடும் பாம்பெனினும், அதைக கொல்லார்கள் நல்லோர்
அடும் பகைவர்க்கும் இரக்கம் காட்டுவது நல்லறமே.

அந்த முதியவர் நாவலூர் நம்பியை நோக்கி, "உனக்கும் எமக்குமிடையே ஒரு வழக்கிருக்கிறது. அதை முடித்த பிறகே நீ திருமணம் செய்யப் புகவேண்டும்" என்றார்.

"உமக்கு அப்படி ஒருவழக்கு உண்டானால் அதை முடித்த பிறகே நான் திருமணம் செய்துகொள்வேன்; சொல்லுங்கள்" என்றார் சுந்தரர்.

உடனே அந்தணர் சபையில் உள்ள அனைவரையும் நோக்கி," இந்நாவலாரூரன் எனனுடைய அடிமை" என்று சொன்னார். அது கேட்டவர்கள், "இவர் எதற்காக இப்படிப் பேசுகிறார்?" எனறு யோசித்தனர். "இது என்ன புதிய வழக்காக இருக்கிறதே!" எனறு சிரித்தனர். சுந்தரர், இந்த அந்தணர் பேசுவது நன்று யிருக்கிறது" என்று கூறிச் சிரித்தார்.

அதுகண்ட முதியவர் தம் உத்தரியத்தைத் தோள்மேல் போட்டுக் கொண்டு சுநதரருககு முன் சென்று," என்ன சிரிக்கிறாய்? இதோ பார்; உன் தந்தைக்கும் தந்தை எனக்கு எழுதித் தந்த அடிமை யோலை இது. இந்தச செய்தியைக் கேட்டு நீ சிரிக்கிறாயே!" என்று வெகுளிக் குறிப்புடன் கேட்டார்.

"அந்தணர் ஒருவர் வேறு அந்தணருக்கு அடிமையாவது வழக்கம இல்லையே! நீர் புதியதாகச் சொல்கிறீரே! இது வரையில கேளாத அதிசயம் உம்முடைய வாயாலே புதிதாகக் கேட்டோம். நீர்பித்தனோ?" எனறார் சுந்தரர்.

"நான் பித்தனாகட்டும்; அல்லது பேயனே ஆகட்டும். அதைப்பற்றிக் கவலை இல்லை. நீ என்னை எவ்வளவு இழிவாகப் பேசினாலும் நான் நாணம் அடைய மாட்டேன். என்னை உனக்குத் தெரியாவிட்டால், நின்று வித்தகம் பேசாதே; எனக்குப் பணி செய்யவேண்டும்; அது அடிமையின் கடமை."

சுந்தரருக்கு யோசனை படர்ந்தது; 'இவரைக் கண்டால்

---

உடன்பட்ட துன்பில் ஒதுங்கி யிராமல்
கடன்பட்டும் சான்றோர்கள் தம்கருமம் செய்வாரே.

என் உள்ளம் அன்பு மீதூர் உருகுகிறது. ஆனால் இவர் கூறும் அப்பத்தியக்கார வார்த்தையோ கோபத்தை எழச் செய்கிறது. அடிமை ஓலை இருக்கிறதென்கிறாரே; அதையும் பார்த்து விடுவோம்' என்று எண்ணி, "எங்கே அந்த ஓலையைக் காட்டும்" என்றார்.

அதைக்கேட்ட அந்தணர், "நீ ஓலையைப் பார்க்கும் தகுதி உடையவனாவாயோ? சபைக்காரருக்குமுன் காட்டுவேன்! நீ ஆளாகப் பணி செய்யக் கடமைப் பட்டவன்" என்றார்.

அது கேட்ட ஆரூரருக்குக் கோபம் வந்து விட்டது. அவ ரிடம் இருந்த ஓலையைப் பறிப்பதற்கு அவரைத் தொடர்ந்தார். முதியவர் திருமணப் பந்தரிலே ஓட, அவரைப் பின்பற்றிச் சென்ற சுந்தரர் அவரிடமிருந்த ஓலையை வலியப்பற்றி வாங்கி, "அந்தணர் அடிமையாவது! இது என்ன முறை?" என்று சொல்லி அவ்வோலையைக் கிழித்து எறிந்தார். அதுகண்ட அவர், "இது என்ன அநியாயம்!" என்று முறையிட்டார்.

அருகி லிருந்தவர்கள் சுந்தரரை விலக்கி, நீர் சொல்லுகிற முறை உலகில் எங்கும் இல்லாத சம்பிரதாயமாக இருக்கிறதே. இதை வைத்துக் கொண்டு வழக்கிடும் நீர் யார்? எங்கே இருக் கிறீர்? சொல்லும்" என்றார்கள்.

"நான் இங்கே இருப்பவன்தான். இதோ அருகில் இருக்கிற வெண்ணெய் நல்லூர்தான் என ஊர். அது இருக் கட்டும். வலிய என கையிலுள்ள ஆவண ஓலையை வாங்கி இவன் கிழித்தானே; இதுவே இவன் உண்மையை மாற்று வதற்காகச் செய்த காரியம் அல்லவா? இதிலிருந்தே இவன் அடிமை யென்பதைக் காட்டிவிட்டான்" என்று முதியவர் கூறினார்.

ஆரூரர், 'இவர் யாரோ பழைய மன்றாடிபோல இருக்கி றார்' என்று எண்ணினார். அவர் உள்ளத்தே அவரையும்

---

பிறர்தம் ரகசியத்தைப் பேரறிஞர் ஆயார்
அறக்கடவுள் சீறும் அநியாயம் ஆகாதே.

அறியாமல் அன்பு பொங்கியது. "நீர் வெண்ணெய் நல்லூர்க் காரரானால் இந்த வழக்கை அந்த ஊரில் தீர்த்துக்கொள்ளலாம்; வாரும்" என்றார்.

"அப்படியே செய்யலாம். நீ வெண்ணெய் நல்லூருக்கு வந்தால, அவ்வூர்ச் சபையோரறிய நான்மறையோர் முன் என்னிடமுள்ள மூல ஓலையைக் காட்டி நீ அடிமை என்பதை நிறுவுவேன். நீ கிழித்தது படியோலைதான்" என்று சொல்லித் தடியை ஊன்றிக் கொண்டு புறப்பட்டார்.

அந்த மறையவர் பின்னே காந்ததைச் சேர்ந்த இரும்பு செல்லுவதைப்போல ஆரூரர் சென்றார். சுற்றத்தினரும், "இது என்ன வியப்பா யிருக்கிறது!" என்று அவருடன் சென்றனர். யாவரும் வெண்ணெய் நல்லூரை அணுகி அங்குள்ள சபையை அடைந்தார்கள். அக்காலத்தில் ஊருக்கு ஊர் நல்லவர்களும் பெரியவர்களும் சேர்ந்த சபை ஒன்று இருக்கும். ஊருக்குப் பொதுவான காரியங்களை அச்சபையினர் கவனித்து நடத்துவார்கள். ஊரில் ஏதேனும் வழக்கு எழுந்தானல் சபையினர் அதை விசாரித்து முடிவு செய்வார்கள்.

வெண்ணெய நல்லூர் சபையிலிருநத நான்மறையோர் முன் நினறு முதிய அநதணர், "இநத நாவலாரூரன் என் அடிமை. அதற்குச் சான்றாக நான் காட்டிய ஓலையை இவன கிழிதெறிந்து விட்டான். இதோ வந்திருக்கிறான். இது என முறைபபாடு" எனறார்.

அவையிலிருந்த பெரியவர்கள் அதைக் கேட்டு, "என்ன ஐயா புதிய வழக்கைச் சொல்கிறீரே. இந்த மாநிலத்தில் அந்தணர் அடிமையாதல் இல்லையே!" எனறனர்.

"இது பரம்பரையாக இசைந்து வநத வழக்கம் அலலவோ! இவன் கிழித்த ஓலை இவன் தந்தைக்குத் தந்தை எனக்கு எழுதிக் கொடுத்தது" என்றார்.

---

செல்வமுளர், நற்கருணை கொண்(டு)அறம் செய்வாரேல்,
துல்ய மணிபதித்த நகைபோல் துலங்குவரே.

உடனே அவையினர் சுந்தரரை நோக்கி, "மனம் இசைந்து எழுதிய ஓலையை இவர் காட்டினாரானால், அந்த வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி யாகுமா? இந்தத் தளர்ந்த வேதியர் தம்முடைய வழக்கைச் சொன்னார். உம்முடைய எண்ணம் யாது?" என்று கேட்டனர்.

"எல்லா நூல்களையும் உணர்ந்த பெரியவர்களே, நான் ஆதி சைவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னைத் தமக்கு அடிமை என்று இவர் சாதிக்கிறார். இது மனத்தினால் அறிவதற்கரிய மாயையாக அல்லவா இருக்கிறது? நான் என்ன சொல்லட்டும்? எனக்கு இன்னதென்றே விளங்கவில்லை" என்றார் சுந்தரர்

அவையினர் அந்தணர் பெருமானை நோக்கி, "இவர் உம்முடைய அடிமை என்பதை எம்முன் சான்றுடன் நிறுவ வேண்டும். ஆட்சியோ ஆவணமோ பிறர் கண்ட காட்சியோ இந்த மூன்றில் ஒன்று காட்டுவீராக" என்று கூற, அவர், முன்னே இவன் கிழித்த ஓலை படியெடுத்த ஓலை; அதற்கு மூலமாகிய ஓலை என்னிடம் வைத்திருக்கின்றேன்" என்றார். "அப்படியானால் அதைக் காட்டுக" என்று சபையினர் சொல்ல, "நான் காட்டுவேன்; ஆனால் இவன் வலிய அதனையும் பற்றிக் கிழித்தெறிந்து விட்டால் நான் என் செய்வேன்" என்று கூற, "அவ்வாறு செய்ய ஒட்டோம்" என்று அவையினர் உறுதி கூற, மறையவர் ஓலையை எடுத்துக் காட்டினார்.

அவையோரின் ஏவலின்படி அங்கிருந்த கரணத்தான் அதை வாங்கினான். பழையதாக இருந்த அதை விரித்து வாசிக்கலானான். "நாவலூரிலுள்ள ஆதிசைவ மறையோன் ஆரூரனாகிய நான், பெரிய அந்தணராகிய வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக் கொடுத்த ஓலையாவது; நானும் என்னுடைய

---

ஈயா உலோபிகளின் உள்ளம் இருளடையும்;
மாயாப் பழியாம்; மனையறமும் துன்பமரோ.

மரபில் வருவோரும் இவருக்கு அடிமையாகித் தொண்டு புரியக் கடவேமாக. இதற்கு இவை என் எழுத்து" என்று ஓலையை வாசிக்கக் கேட்ட மறையவர்கள், மேலெழுத்திட்டவர்களின் பெயரையும் கேட்டு, அவர்கள் அவ்வெழுத்துக்களைக் கண்டு, "அவை அவர்கள் எழுத்தே" என்று ஒப்புக் கொண்டனர். பின்பு சுந்தரரைப் பார்த்து, "இந்தக் கையெழுத்து உங்கள் பாட்டனுடைய எழுத்துதானா என்பதைத் தெளிவாகப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்" என்றனர். அப்போது வழக்கிட வந்த பிரானார், "இவனுடைய பாட்டனார் எழுதிய வேறு ஓலைகள் உண்டானால் அவற்றைக் கொணர்ந்து இதனோடு நன்றாக ஒப்பு நோக்கிப் பார்த்துத் தெளியுங்கள்" என்றார்.

அவையினர் அப்படியே ஆவணக் களரியில் காப்பில இருந்த ஓலைகளை எடுத்து வரச்செய்து ஒப்பு நோக்கிய பொழுது இரண்டும் ஒத்திருந்ததைக் கண்டார்கள். உடனே, "இனிப் பார்க்க வேண்டியது வேறு ஒன்றும் இல்லை இந்த மறைய வருக்கு நம்பியாரூரராகிய நீர் தோற்றீர். ஆகவே ஆவணத்தில் உள்ளபடி இவருக்கு ஏவல் செய்வது உம்முடைய கடமை" என்று அவையினர் தீர்ப்பு அளித்தார்கள்.

சுந்தரர், "நீதிமுறை இதுவானால் நான் இதற்கு இசைய மாட்டேன் என்று சொல்ல முடியுமோ?" என்று சொல்லி னார்.

அப்போது அவையினர் முதுமறையவரை நோக்கி, "அந் தணர் பெருமானே, நீர் காட்டிய ஆவணத்தில் உமக்கு எங்கள் ஊர் என்று இருக்கிறதே! உம்முடைய வீடு இங்கே எங்கிருக் கிறது ? எவ்வளவு காலமாக வாழ்கிறீர்?" என்று கேட்டனர்.

வழக்கில் வெற்றி பெற்ற புண்ணிய முனிவர், "என்னை ஒருவரும் அறிந்திலீரோ? அப்படியானால் என்னுடன் வாரும்" என்று கூறி, அவையிலுள்ள மறையவர்களும், நம்பி ஆரூரரும்

---

செய்தற்குரிய காலத்தில் நல்லறத்தைச் செய்யார்,
மயக்கமுறும் அந்திமத்தில் மாவருத்தம் கொள்வாரே.

பின் தொடர்ந்து செல்ல முன் நடந்தார். திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருக்கோயிலாகிய திருவருட்டுறைக்குள் புகுந்தவர் மறைந்தார். பின் வந்தவர்கள் அவரைக் காணாமல் திகைத்தனர்.

"பெரியவர் இந்தக் கோயிலில புக்கது ஏன?" எனறு எண்ணிய சுந்தரர், தனியே திருவருட்டுறைக்குள் புகுந்து அழைக்க, இறைவன இடபவாகனரூடனுய்த தோன்றி, "நீ நம்முடைய தொண்டன. நம்முடைய ஏவலாலே உலகில பிறந்தாய்; நாம் வாககளிததபடி இங்கே வந்து உன்னைத் தடுத்தாட் கொண்டோம் " எனறு திருவாய் மலர்ந்தருளினுன.

இதனைக்கேட்ட நம்பி ஆரூரர் தாய்பபசுவின கனைபபைக் கேட்ட கன்றைப போலக் கதறித் தலைமேல் கைகுவித்து ஆடினுர்; பாடினுர்; "எம்பெருமான என்னை வலிய ஆட் கொண்ட பேரருள்தான் என்னே!" எனறு விம்மினுர். அப் போது இறைவன, "நீ என்னிடம் வனமையாகப பேசினமையின் உனக்கு வன்றொண்டன என்னும் பெயர் அமைவதாகுக. நமக்கு விருபபமான அருசசனை பாட்டே ஆகும்; ஆதலால் நீ தமிழ்ப் பாககளால் நமமைப பாடுக" என்று பணித்தான. சுநதரர் தொழுதபடியே, " வேதியனுகி வநது வழக்கினுல் வெனறு ஆட் கொண்ட ஆரமுதே! குணபபெருங்கடலே; உன்னிடம் எதை அறிந்து எப்படிப் பாடுவேன!" என்று உருகினுர். இறைவன, " முனபு நம்மைப பிததன் என்று மொழிநதாய ஆதலின், பித்த னென்றே எடுத்துப் பாடுவாயாக " எனறு அருளினுர்.

அந்த அருளே துணையாக வன்றொண்டா " பித்தாபிறை சூடி " என்று எடுத்துத தேவாரப் பதிகததைப் பாடலானுர்.

---

கற்கத தகும்நாளில் கலலாதார, பினனுளில்
கற்றிலமென் றெண்ணிக் கலங்குவது நிச்சயமே.

உ

திருச்செந்தூர்

## திருப்புகழ் விரிவுரை.

(குகஸ்ரீ)

தந்த பசிதனைய றிந்து முலையமுது
    தந்து முதுகுதட    வியதாயார்
  தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
    தங்கை மருகருயி    ரெனவேசார்
மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவு
    மந்த வரிசைமொழி    பகர்கேடா
  வந்து தலைநவிர விழ்ந்து தரைபுகம
    யங்க வொருமகிட    மிசையேறி
அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
    லஞ்ச லெனவலிய    மயில்மேல்நீ
  அந்த மறலியொ டுகந்த மனிதனம
    தன்ப னெனமொழிய    வருவாயே;
சிந்தை மகிழமலை மங்கை நகிலிணைகள்
    சிந்து பயமயிலு    மயில்வீரா!
  திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
    செந்தி னகரிலுறை    பெருமாளே!

(பதவுரை.) (சிந்தை மகிழ................பெருமாளே!)

சிந்தை மகிழ மலைமங்கை நகில் இணைகள் சிந்து பயம் அயிலும் அயில் வீர—

---

தகுதியிலார் வாழத் தக்கவர்கள் தாழ்தல்,
வகையிலா இக்கலியின் வண்மையெனல் ஓர்ந்தோமே.

(இனிய) திருவுளம் இன்புறும்படி, இறைவியின் (அருட்) குயங்கள் இரண்டும் சிந்துகின்ற அமுதத்தை, (வியந்து) பருகிய வேல் வீரா ! ;

திங்கள் அரவு நதி துன்று சடிலர் அருள் (பெருமாளே-) மதியும் பாம்பும் நதியும் பொதிந்த (காடுபோல்) சடைக் கண்ணுதல் அருளிய கம்பீரா ! ;

செந்தில் நகரில் உறை பெருமாளே - திருச்செந்தில் பதியில (இனிது) எழுந்தருளிய பெருமையில் உயர்ந்த பெரியோனே ! ;

(தந்தபசி..............மயங்க)

தந்த பசிதனை யறிந்து - (உதரத் தீ) உண்டாக்கிய பசியை உணர்ந்து ;

முலை அமுது தந்து முதுகு தடவிய தாயார் - முலைப் பால் ஊட்டி முதுகை வருடிய தாய் ;

தம்பி - பின் பிறந்த துணைவன் ;

பணிவு இடைசெய் தொண்டர் - விநயத்தை இடையிடை வெளிப்படுத்தும் வேலை ஆட்கள் ;

பிரியம் உள தங்கை - (தனி) அன்பு என்றும் உள்ள தங்கை ;

(பிரியம் உள) மருகர் - மருவிய அன்புடைய மருகர்கள் ;

உயிர் எனவே சார் மைந்தர் - உயிர் எனும்படி உறவு பூண்ட மக்கள் ;

(உயிர் எனவே சார்) மனைவியர் - பிராண நாயகி ;

கடும்பு - செறிந்து நிறைந்த உறவினர் ;

கடன் உதவும் அந்த வரிசை மொழி பகர் கேடா வந்து - கடமையைச் செலுத்தும் தொன்று தொட்ட உறவு முறை மொழிகளை (உளறி) மொழியும் அலங்கோலமாக அணுகி,

---

நரம்பறுந்த வீணையினில் நாதமெழா வாறே,
வரம்புணர்ந்தார் நட்பகன்றால், வாழ்வின்பம் பாழாமே.

தலை நவிர் அவிழ்ந்து தரைபுக - தலைமயிர் அவிழ்ந்து தரையிற் புரளுமாறு விழுந்து புரண்டு விம்மி யழும்படி ;

மயஙக - (நிலைதத என் அநதக் கரணங்கள்) நிலைகுலைய ;

(ஒரு மகிடம்..............வருகையினில்.)

ஒரு மகிடம் மிசை ஏறி - ஒப்பற்ற எருமைக் கடாவின் மேல் ஏறி;

அந்தகனும் எனை அடர்ந்து வருகையினில் அறிவுக் கண் அவிநத இயமனும், (எளிய) எனனை அணுகி வரும் அந்தச சமயத்தில ;

(அஞ்சல் என .....வருவாயே.)

அஞ்சல என - பயப்படாதேடா என்று (அபய குரல் கொடுத்து) ;

வலிய மயில் மேல் - மாபெரும் ஆற்றலுடைய மயிலின் மேல் (அமர்ந்த கோலத்தில்) ;

அந்த மறலியொடு - (கொடுமை நிறைந்த) அந்த இயம னிடம் ;

கந்த மனிதன் - (இவன்) ஞான வாசனை யுடையன் ;

நமது அனபன் என மொழிய - (பேருன) நமது அன்பைப் பெற்றவன் என்று (அவனுக்குத்) தெரிவிக்க ;

நீ வருவாயே - தேவரீர் எழுந்தருளி வரவேணும், (எ - று).

குறிப்பு:- 'பிரியமுள' எனும் அடை, தங்கையையும் மரு கரையும் தழுவியது. 'உயிர் எனவே சார்' எனும் அடை, மைந்தரையும் மனைவியையும் மருவியது.

அடர்நது செறிந்த புதரை, கடும்புதல் என்பர் : அதுபோல் மிக நெருங்கிய அளவிலா உறவினர், 'கடும்பு' எனும் பெயரால் காணவுளர். கடன - (உறவினர்) கடமை ; உதவுதல் - (அவ் வுறவை) வெளிப்படுத்தல்.

---

ஓங்குமயில் கொண்டையறுத்(து) அதன்பசிக்கே ஊட்டுநர் வாங்கும் வரியால், நாட்டை வளம்செய்வம் ஏன்பாரே. [போல்,

நவிர் - மயிர். மகிடம் - மகிஷம் ; வடசொல்; கம்பீரமான பயங்கரக் கடா எனும் பொருட்டு. மறல் - கொடுமை : அதை யுடையவன் 'மறலி'.

'மறலியொடுகந்த மனிதன்' எனபது குற்றுகரப புணர்ச்சி யென்று கொண்டு, மறலியொடு உகந்த மனிதன் எனப் பிரித்துப் பொருள் கொள்வதும் ஒருவகை. 'மறலியொடு கந்த மனிதன' எனின, இயல்புப் புணர்ச்சி : இயல்புப் புணர்சசியே பதவுரையிற் கொளளப் பெற்றது கந்தம் - ஞானமணம். மலை மங்கை - இதின் நேர் வடசொல் பார்வதி. நகில் - ஸ்தனம். இணை - இரண்டு. 'பயம்' - பால். 'அயிலும் அயில வீரா' என்பது, பிராசம் எனும் சொல்லணி. அயில் - ஞானக கூர்மை.

விரிவுரை.

சத்தில் இருந்து, விமல ஆறு பொறிகள் வெளிப்பட்டன சரவண நிலயத்தைச் சார்ந்தன. வித்தக சேய்களாய் விளையாடி யிருந்தன. விரைந்த விமலை, ஏக காலத்தில ஆறு சேய்களையும் எடுத்தாள். அவ்வளவில, ஆறிரு முகமும் ஆறிரு கையும், செம்மை பொருநதொரு மேனியுமாகச சிறந்து நின்றான் சிவை குமரன்.

மலைமகள் திருவுளம், அது கண்டு மகிழ்ந்தது. அருமைச் சித்தான அமலைக்கு, அபரம் ஒரு குயம் ; பரம் ஒரு தனம். அநத இரு குய ஞானம், புனித பாலாகிப் பொங்கியது. பரம அந்த அமுதைப் பருகி, ஆநந்தமே குகப்பிரமம் என்று ஆயினன ஆறு முகன்.

ஞானத்தைப் பருகினன் ; ஞானவேல் ஏந்தினன் ; அவை களால் உலக அரிஷாதி பகைகள் அழிந்தன ; அருள் நீர்கள், விரிவாக இவைகளை அறிவிக்கின்றன. உவகை கொண்டு அவைகளை ஓதினேன் ; என் உள்ளம் பாகாய் உருகுகின்றதே !

---

உழைபபிற்கும் சோம்பலுக்கும் உள்ளபயன் உண்டு;
தழைத்த அனுபவங்கள் தாரணியில் உள்ளதரோ.

"சிந்தை மகிழ மலை மங்கை நகில் இணைகள் சிந்து -பயம் அயிலும் அயில் வீரா'! என்று, ஆர்வத்தால் கூவி உம்மை அழைக்க லாயினேன்.

பாம்பும் மதியும் பகை யுடையவை ; எனினும் சிவனுர் திரு முடியில் சேர்ந்த பின், அந்த இரண்டும் நட்புப பூண்டு நயம் அடைகின்றன.

கலகலப்பும் வேகமும் உடையது கங்கைநதி. அதுவும் அவரிடத்தில, சலனம் அடங்கிச சாந்தம் பெற்றது. ஆண்டவன சந்நிதியிலதான் அமைதி; அதற்கு இவைகளைவிட வேறு உதாரணம் வேண்டுமோ?

பாம்பு - குண்டலினி. திங்கள் - அமுத மண்டலம். கங்கை- பாவம் கழுவும் பரம தீர்த்தம். இம் மூன்றும் சார்ந்த யோக சங்கரர், ' சடிலர் ' எனப் பெறுகிறுர். ஆ ! என்ன அருமை !

[2] திங்கள் அரவு நதி துன்று சடிலர்' என்று போற்றி அவரை உலகம் புகழ்கிறது.

அத்தகைய உயர்சிவம் அருளிய உம்மினும் பெரியவர்கள் யார் ஐயா? அதனுல்தான், 'பெருமாளே' என்று, உம்மை உவநது விளித்து உவகை அடைகிறேம்.

செந்து - ஆன்மா; இல் - (முத்தி) நிலம். பிழையையே பெருக்கிப் பிறவித் துனபுறும் உயிர்கட்கு, திருவருள் காட்டும் படைவீடு திருச்செந்தூர். ஆன்மாக்கடகுக் காப்பளிக்க, என்றும் அத்தலத்தில எழுந்தருளி யிருககினறீர் ; சொரூபத்தில, பேறுதரும் எபபொருளிலும் பெரிய பொருள் , தடத்தத்தில், பெரியரிற் பெரியோன் எனவுள உம்மை,

'செந்தில் நகரில் உறை பெருமாளே!' என்று, கூவி எம் உணர்வு கூப்பிடுகின்றதே! பிரபோ! கேண்மை எம் விணணப்பததைக் கேட்டருளும்!

---

ஓவியன்தன் சிந்தனையை ஓவியம்கொண்(டு) ஓர்தல்போல்,
பாவ அதிகாரியை செய்கைவழி பார்ப்போமே.

உடம்புள் புகுந்தது உயிர். அப்பொழுதே படர்ந்து தொடர்ந்தது பசி.

பிறந்ததும் அழுகிறது பிள்ளை. கடும்பசிதான் அதற்குக் காரணம். பிறந்ததும் அழாத பிள்ளை பெரும்பாலும் பிழைப்பது இல்லை. பசியின் சோதனை, வேதனையாகி விளைகிறது. பசிக்கு முன் புசிப்பது பழுது. பசித்தபின் புசித்தால், அது வாடிய பயிர்க்கு நீர் வார்த்ததுபோல் ஆகும்.

பாதிக்கும் பசித்தீ, சேயின வயிற்றில் பரவும் பொழுது, தாயின் குயங்களில் பால் சுரக்கும். அதனால் அவைகளில் நமை எழும்; இயற்கையின அதிசயத்தை என என்பது! அக் குறிப்பை அறிநது, செய்யும் வேலையைக் கைவிட்டு, ஓடி வந்து பால் கொடுப்பள் உததமத் தாய்

(மகவு அழுதபின பால் தருவள் மத்திமத் தாய். அழுதாலும், தன் வேலைகள் யாவும் முடிந்த பின்னரே தருபவள் அதமத் தாய். இவர்கள் சொரணை கெட்ட ஜன்மங்கள்.)

குழந்தைக்குப் பால் கொடுக்கும் பொழுது, சுரப்பும், நமைச்சலும், உறிஞ்சலும சேர்ந்து, ஊட்டும் தாய்க்கு இன்பச் சிலிர்ப்பை உண்டாக்கும்.

கண்ணப்பன் எம் திருமுடி மலரை, செருப்பு அணிந்த காலால் தளளினன்; அவ்வமயம்,

" சிற்றிள மகன்பூங் கையால் திருமுலை வருடப் புட்ட
பெற்றதாய் என்ன, நெஞ்சம் பெரிது உருகுது "

என்று சிவகோசரியார்க்குச சிவபிரான திருவாய் மலர்ந்த செய்தி, இங்கு நம் நினைவில எழுகிறது அல்லவா!

" பால் நினைந்தூட்டும் தாய் " எனவும்,

" தாயாய் முலையைத் தருவானே!
தாராது ஒழிந்தால் சவலையாய்

---

பகைவர்கள் தூண்டப் பழிபபாரைக் கணடு,
நகைப்பதன்றி, அன்னவரை நாம்சினப்ப தாகாதே.

நாயேன் ஒழிந்து போவேனோ ?
நம்பி யினித்தான் நல்காயே !

எனவும் வரும் திருவாசகங்கள், நினைவில் இங்கு நிழலிடுகின்றன.

பருகுகிறது சேய், தாய்க்குப் பெருகுகிறது இன்பம். அந்த இன்பம் மிகமிக, அடங்காத ஆர்வத்தால், குழந்தையின் முதுகை வருடிக் கொண்டே அணைக்கின்றாள் அன்னை. அடடா! அவட்குத்தான் எத்துணை அன்பு பெருகுகிறது.

" தந்த பசிதனை அறிந்து முலையமுது
தந்து முதுகு தடவிய தாயார் "

நிலையை நினைக்கிற போதே, பெற்றவள் ஆர்வம் பெரிது தெரிகிறதே !

ஊட்டிய பாலும், ஆஹா! ஆக்கையை வளர்க்கும் அமுதம் அல்லவா !

தனக்குப் பின் பிறந்தானை, தம்பின் என்பது இலக்கண வழக்கு; தம்பி என்பது உலக வழக்கு. "தம்பி யுள்ளான் படைக்கு அஞ்சான" என்பது தமயன் கண்ட தனி அனுபவம்.

விநயம் இடையிடை வெளிப்பட, வீட்டில் வேலைசெய்யும் ஆட்கள், ' பணிவு இடை செய் தொண்டர் ' என்ப பெறுவர்: சிறுத்தொண்டர் திருமாளிகைப் பணிமகள், சந்தனத் தாதி போல்பவர், அன்று இருந்தனர்; இன்றும் அத்தகையர் அருகி இருக்கின்றனர்.

ஆடை நெகிழ்கிறது. முன் கைகள் இரண்டும், மானம் காக்க முந்துகின்றன. அங்ஙனம் தம் கைபோல் பெரிதும் உதவப் பின் பிறந்தாளை, தங்கை என்று அழைப்பதில், எத்துணை இன்பம் இருக்கிறது.

தங்கை பிள்ளை, தமக்கை மகன், மகளை மணந்தோன் ஆகியோர், மருகர் எனப் பெறுவர். மணம்பெற வந்தவர் ஆதலின்,

---

ஆற்றல்மனம் நாற்றமுற்றே ஆதிக்கம் காட்டல்போல்,
கூற்றன உயிர்கொள்ளும் போ(து,)இரக்கம் கொள்ளானே

அவர்களை மருமகர் என்றும் அழைப்பது உண்டு. (மரு-மணம்.) அவர்களையும், 'பிரிய முள மருகர்' என்று பேசுவம்.

" அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ!"

என்று அப்பர் அமலனை அனுபவிப்பதை அறியாதாரும் உளரேயோ ?

"ஏரில் பூட்டிய எருமை, மாமனும் மருகனும் போன்ற அனபின" என்பது சீவக சிந்தாமணி. எனவே, பிரியமுள எனும் அடை, தங்கைக்கும் மருகற்கும் தனியுரிமை பெறுகிறது.

மைந்து - வலிமை; அதை யுடையவர் மைந்தர். தந்தையின ஆகக சக்தியோ, அழிவு சக்தியோ தனயர் உருவம் பெறும் எனபது, இதனி லிருந்தும் தெரிகிறது அல்லவா !

தன்னையே வேறு ஒரு உருவில் தந்த தந்தைக்கு, உயிர் எனவே சார் மைநதர்' உளர்.

மனைவி - மனையில் வாழும் உரிமை யுடையவள் என்பது, பொதுப பொருள், மனஸ் தத்துவத்தில் நிரந்தரமான இடம் பெறுபவள் என்பது சிறபபுப் பொருள். பிராணநாயகி எனப் பெயா பெறும் அப் பெண்ணின் நலலாளையும், ('உயிர் எனவே சார்) மனைவி' எனறு உணர்கிறேம்

'பெண்சாதி பெருவிலங்கு, பிள்ளை ஒரு சுள்ளாணி என்று பாடும் துறவிகளும், தாயையும் சேயையும் இணைத்தே பாடுவது இயற்கையாய உளது.

காட்டில் பொதிந்து இருப்பது புதர்; அதுபோல், நாட்டில் உறவினர் அடர்ந்து உளர்; உரம் பெற ஒட்டி உறவாடும் அவர்களை, 'கடும்பு' எனும் பெயரால் காண்கிறேம்.

தாய், தம்பி, பணியாட்கள், தங்கை, மருகர், மைந்தர், மனைவியர் முதலிய பல உறவினர்கள் நடுவில் பல்லிளித்து, மாபெரும் கால தததுவ சேடடையை மறநதே யிருக்கிறேம்.

---

வாயதத செருபபில், கல் வந்(து) உறுத்தல்போல் தருக்கி, ஏய்த்து, கரந்து, இடர் விளைப்பாரும் உளரே.

திடீரென்று ஒருநாள், கண்கள் இருண்டன. செவிகள் கும்மென்று அடைபட்டன, நாவறண்டது. சொற்கள் குழறின அறிவு அகன்றது. உணர்ச்சி ஒடுங்கியது. உடல் நிலத்தில் உருண்டது.

ஐயோ மகனே! "நெஞ்சில கிடத்தி வளர்த்தேனே, கண்ணில் நித்திரை நீக்கி நான் காததேனே! விஞ்சு தவத்தினில் பெற்றேனே - என்னை விட்டுப் பிரிந்து போகலாமோ?" என்று வயிறு பிசைந்து, அன்னை வாடுகின்றாளே!

அண்ணா! அண்ணா! என்று தம்பி அலறுகிறான்.

முதலாளீ! ஐயோ! முதலாளீ என்று பணியாட்கள் மோதிக் கொள்கின்றனர்.

உடன் பிறந்த அண்ணா! நான் இருக்க நீ போதல் முறை தானோ? அண்ணா! அண்ணா என்று தங்கை வாயறைந்து அழு கின்றாளே!

மாமா! மாமா! ஐயையோ மாமா என்று, மருகர்கள் அண்டம் அதிர அதிர்கின்றார்.

எனைத் தந்த அப்பா! முகத்தோடு முகம் வைத்து முத்தாடும் உன் முகம் மறக்க முடியாதே! ஐயோ அப்பா என்று, தலையில் அடித்துக் கொண்டு தநயர் கதறல் தாங்க முடிவதா யில்லையே!

இது என்ன கொள்ளை! ஐயோ இது என்ன மோசம்! மண அறையில் நான் அல்லவா கிழக்கு முகம் குந்தினேன! என்னைப் பாருங்கள! கண்ணைத் திறவுங்கள்! ஆ! என்னைக் கைவிட்டு விட்டீர்களா! மஞ்சள் கறுப்பாச்சுதே! எனக்கு மருககொழுந் தும் வேம்பாச்சுதே என்று, மாரடித்து புலம்புகின்றாள் மனைவி.

சிற்றப்பா! பெரியப்பா! அத்தான! தாத்தா! தம்பி என்று கடும்பு என்பபெறும் நெருங்கிய உறவினர், உறவு முறையை வரிசைப்பட உரைத்து, நிலைகுலைந்து நெருங்கி, தலைமயிர் நிலம் புரள உருண்டு புரண்டு ஒப்பாரி வைக்கின்றார், "கடும்பு கடன்

---

காலத்தில் வேங்கை மலரும் கணக்கதுபோல்,
ஞாலத்தில் செல்வமது. நல்லூழ்வந் தால்வருமே.

உதவும் அந்த வரிசை மொழி பகர்கேடா வந்து, தலைவிர் அவிழ்ந்து தரைபுகத்' தளரும் வருத்தம் தாங்க முடியவில்லையே!'

அடியேன் அறிவு மயங்கிய அந்நிலையில், குமுறும் இச் குரல்கள், விறு விறு என்று செவியில் விழுகின்றன. வேதனை தாங்க முடியவில்லை. வாய் அசைக்க வழியில்லை. கண் திறக்கக் கை யசைக்க இயலவில்லை.

இந்நிலையில், நுண்ணுடலில் உயிர் நுழைகிறது. அதே நேரத்தில், அதி பயங்கர எருமைக்கடா ஒன்று, மேலேறுவது போல எதிர் நோக்கி வருகிறது.

ஆ! அதனமேல் ஒருவன். யார் அவன? பார்க்க அதி பயங் கர தோற்றம். அவன் கண்கள் உருண்டு கனல் கக்குகின்றன. படபட என்று அவன் மீசைகள் துடிக்கின்றன. கனத்த பற்களை நறநற என்று கடிக்கிருன். மலைபோல் தண்டு, சுழலுகின்ற முத்தலைச சூலம். பனந்துண்டு போன்ற கையில் பாசம். ஐயோ! எளிய என்னை அகப்படுத்த, இத்தனைக் கருவிகளா வேண்டும் ?

கோவெனக் கதறுகின்றவர்கள் விஷயத்திலேனும் இரக்கம் சிறிதும் இல்லா அவன், அறிவுக் கண் அவிந்தவன்தான்.

அணு அணுவாய் அணுகுகின்ருனே! எந்த விநாடியில் என்ன நேருமோ என்று இதயம் அதிர்கிறதே!

அதேசமயத்தில, நாம இருக்கப பயம் ஏன! அஞ்சாதே என அபய குரல் தோனற, கடலே உடலாக, நீல வானமே தோகை யான மயில்மேல நீ வா ஐயா!

கம்பீர ஆண்மை மயிலைக் கண்டதும், என்னை நோக்கி முந்திய எருமை பிந்தும்.

மறம் - கொடுமை; அதை யுடையவன் மறலி. அவனிடம் எளியேனைக் குறித்து, கந்த மனிதன! நமது அனபன என இரண்டொரு சொற்கள நீர் சொன்னுல் போதும்,

---

எதிர்காலம் எண்ணி நத்தை, நீரைச் சேமிக்கும்;
அஃதறிநது செய்கை செய்வார், பேரறிஞர் ஆவாரே.

ஞான வாசனையுடையவன். மோசமான விஷய வாசனைகளை மோந்து கொள்ளாதவன். அருள்மண அனுபவி; இப் பொருள்கள் கந்தமனிதன் என்பதனில் இருக்கிறது.

நம் அன்பர்கள் கூட்டத்தில் ஒருவன், நம் அன்பிற்குப் பாத்திரம் ஆனவன எனும் பொருள்கள்,

'நமது அன்பன்' என்பதில நடமிடுகின்றது.

காம குரோத லோப மோக மத மாற்சர்யாதி வாசனைகளை இடையறுது மோநது இருபபாரை, நான் எனது எனும் அகங் காரங்களில் அனபு வைததவர்களை, இயமன் பிடிப்பன் அடிபபன்.

கநத மனிதர்களை, அனபர்களைத் தொடுதற்கும் அருகதை யற்ற இயமன, உமது மொழிகளைக் கேட்டு ஓடியே போவன். அதன் பின் அடியேன் அமைதி யடைவன், எனை யெண்ணிக் கலங்கியவர்களும், பேருன சாந்தியைப் பெறுவர்.

இப்பேறு நேர, மயிலமேல் வா ஐயா! விடுதலை விளைய, இயமனிடம் இது சொல் ஐயா! என்று இறைஞ்சியபடி.

"உயிர்வரின் உககுறள் மெய்விடடோடும்." "உடல் மேல் உயிர் வந்து ஒனறுவது இயல்பே" எனும் விதிகளின்படி, மறலி யொடு உகந்த மனிதன் ' எனப பிரிபபினும் ஆம். அங்ஙன மேல், உகந்த மனிதன் - நம்மைக் காதலித்தவன் : மனிதரிலும் மாடுண்டு குரஙகுண்டு நாயுண்டு பேயுண்டு; மனிதப் பிறப் படைந்த இவன், மனித இயல்பு மாருதவன் எனறு பொருள் கொளவதும் ஒருவகை.

உகந்தவன - நம்மைக் காதலிததவன்; நமது அன்பன் - (அதனுல்) நம் அன்பிற்கு உரியவன் ஆயினன் எனவரும் இந்த சிபார்சு மொழிகளை, இயமன் பற்ற வரும் அன்று அருள் எனறு, விநயம் தோன்ற முனகூட்டி விண்ணபபித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

---

வாழ் கலவியால், அறிவு வந்துவிடா; கற்றதெலாம்,
வாழறிவிலே தஙக வைத்துயாந்து, வாழவோமே.

## குமாரஸ்தவ விளக்கவுரை

(திருப்புகழ்சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.L.,

**முன்னுரை** :—பாம்பனடிகளருளிய நூல்களைப் பயில்வோர் முதலில் குமாரஸ்தவம் கூறியே தொடங்கவேண்டும் என்பது அடிகளார் கட்டளை. அதன்படி முதன்முதல் குமாரஸ்தவ விளக்கம் வருகிறது. குமாரஸ்தவம் என்பது குமார பிரானைத் தோத்திரம் செய்யும் நூல் எனப் பொருள்படும்.

### குமார நாமச் சிறப்பு :

மேலவர் போற்றும் வேலவன் திருநாமங்களுள் குமரன் என்ற திருநாமம் தனிச சிறப்புடையது. அதற்குப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. அவற்றைச் சிறிது நோக்குவாம்.

1. எம்பிரான், மற்றவர்களைப்போலக் குழந்தையாய், கிழவனாய் வளர்ந்து வாழ்ந்து மடிதலின்றி எனறும் மாறாத இளங்குருத்துக் கோலத்துடனிருப்பவன். ஆதலால் எப்போதும் இளையான், "ஸதா பாலதவாத் குமார:" எனபபடுகிறான். இப்பொருளில நம் அருணகிரிநாத சுவாமிகளும் "எனறும் அகலாத இளமைக்கார!" எனப போற்றுகிறார். முருகன் எனற தனித் தமிழ்சசொல்லும் குமரன் என்ற சொல்லின் பொருளே கொண்டதாகும்.

2. ஆண்டவனுக்கு இருபக்கங்களிலும் வள்ளி, தெய்வயானை என்ற இரு தேவியர் உளர் என்பது பௌராணிக உலகம். ஆயினும், அவ்விரு தேவியர்களும் இச்சை, கிரியை என்ற சக்திகளேயாம். இறைவனிடத்திலிருந்து பிரிக்க முடியாத வேட்கையும், செயலுமே இவர்கள ஆவர். எனவே,

---

நற்செயலகள் செய்தால, நலமுடையோர் ஆசிவரும்;
தற்புகழ்ச்சி, என்றும் தலைகுனியச் செய்யுமே.

முருகவேள் இருதேவியருட னிருந்தாலும் பிரமசாரியே என்க. மேலும் உலகத்தவர்போல மனைவியரைக் கொண்டு சம்சார சாகரத்தில அழுந்துவா னலலன். அவன் எப்போதும் பிரமசாரி யாக இருப்பதால் குமாரன் எனப்படுகிறான்.

" ஸதா பரஹ்மசாரிதவாத்வா குமார: "—இக் கருத்தைப் " பவன் பிரமசாரி யாவான் " எனறு சிவஞான சிததியார் கூறு வதை நோக்குக.

3. கௌ—ப்ருதிவ்யாம், மாம்—லக்ஷ்மீம், ராதி—ததா தீதிவா குமார:

பூமியில் செல்வததைத தருகினறவன். குமரன் என்ற பேர் படைத்த பெருமான, தன் பிரிவிலா அடியார்கட்கு வற்றாத செலவம் அனைத்தையும் வாரி வழங்குவான. இதனை வைததீசு வரன கோவில் எனபபடும் புள்ளிருக்கு வேளூரில உள்ள முருக பிரானுக்குச செல்வ முத்துக்குமரன் எனற திருநாமம் வழஙகுவது காண்க.

4. கௌ—ப்ருதிவ்யாம், மாரயதி—மனமதவத் ஆசர தீதிவா குமார:

பூமியில் மன்மதனைப்போல் அழகன். முருகபிரானுக்கு 'வேள்' என்று பெயருண்டு. வேள எனறு மனமதனுக்கும பெய ருண்டு. அழகினால் பிறரை விரும்பச செய்வானாதலால் இப் பெயர் வந்தது. ஆனால முருகவேளின அழகு கண்டார்க்குச் செம்மை நலம் என்ற சிவநலத்தை உண்டாகக வல்லது. மன் மதன் அழகால் விளைவது கருவில் சேர்க்கும் பிறவியே. கார் வேள் எனறு மன்மதனையும் இக்காரணம் பறறியே அழைப்பர்.

5. மார: மன்மதனை, கு—குற்சிதம் செய்பவன. எந்த வேளையும் மருள்செய்யும் கந்தவேள் குமரன் எனறும் பொரு ளாகும். நிறமும் கரியனாய், காமவேதனையை மிகுவித்து, பிறவி

ஆட்டிடையன் பெற்றமகள் அரசை மணநதாலும,
ஊட்டு பசும்பாலை உடற்காகா எனபாளே.

யாகிய கருவாதனைக்கு வழிகோலும் மன்மதனைத் தனது செந்நிற அழகினாலும், வீட்டின் வேட்கையைத் தூண்டி, முத்தி நலத்துக்கு முன்னின் றருளுதலின், குற்சிதம் செய்வதால் குமாரன என்ற பெயர் உண்டு.

6. மார: மன்மத வேதனை, கு—ஒழிப்பவன். முருக வேள் சிவனார் நெற்றிக்கண்ணாகிய ஞானக்கண்ணில் தோன்றியதாலும், சிவனார் காமனை முனிந்த பரமன் ஆதலாலும், குமரன் மனமத வாதனையை ஒழிபபவன் என்க.

7. கு: அஞ்ஞானத்தை, மார—அழிப்பவன. அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் மெயஞானை பண்டிதன் குமரன் ஆம். அலலது கு—குறசிதமான மலத்தை, மார - அழிப்பவன் தான் குமரன். இக் கருத்தை நமது பாம்பனடிகள் அருளிய தகராலய ரகசியத்தில்

" குவ்வெனும் குற்சித மாமலம்
கொனறருள செய்பவன் மாரன் என்று
ஒவ்விடும் அர்ததம தாமிவை
ஒன்றும் நுவற்சி குமாரன் என்று
உவ்வுளர் நாவி லெழும்பவே
உளளது சநததம் நன்னிலைப
பவ்வமெனும் குமரா எனப்
பன்னுநர் பாசறை பாறுமே"

என்பதும் காண்க.

8. குத்ஸிதாந மாரயதீதிவா குமார: குத்சிதாளைக் கொல்லுகிறவன் குமாரன எனபன போன்ற பல பொருள் களும் கூறப்படுகின்றன.

---

குலத்தின குணம்மறையக் கூர்ந்து முயனருலும்
வலமுள்ள அக்குணத்தின் வாசனையே வீசுமரோ.

**ஸ்தவம் :**

ஸ்தவம் என்ற வடசொல் தோத்திரம் எனப் பொருள்படும். நாமம் பகர்வதே தவம்' என்று மாதவச் சிவஞான யோகிகள் அருளிய சிவ தத்வ விவேகம் என்ற நூல் தெரிவிக்கிறது. ரங்கராஜஸ்தவம் என்றொரு வைணவ நூலும் பிற வடமொழி நூல்களும் இப் பெயரில் வழங்குவது அறிக.

**குமாரஸ்தவ வரலாறு :**

இந் நூலைப் பாம்பனடிகள் தமக்குற்ற வெப்புநோய் நீங்குமாறு 1918ல் அருளினார். இதனைபபற்றி புலவர் 'அரசு' கூறுவதை இங்குத் தருகிறோம்.

" அடியவர் தம்பால் ஒன்றை ஆண்டவன் விரும்பி னங்கே
ஆடியவர் தமக்கு இடுக்கண போல்ஒன்றை ஆக்கியுந்த
அடியவர் வருத்த நீக்கல் அருள்விளை யாட்டாம் அவ்வா(று)
அடிகள்பால வெப்பு நோயொன்று ஆறுமா முகவன காட்ட
வெபபுநோய் வந்துபற்ற வேற்கைய னருளீதென்று
தப்பறுத்திடும் குமாரத் தவமெனும் நூலை யாத்தெம்
அப்பனு ரருளினலே வெபபுநோ யாறப்பெறறார்
ஒபபிலாப் பத்தொன் பானூற் றொருபதி னெட்டா மாண்டில்"

[ஆண்டவன அடியவரிடம் ஏதேனும் ஒன்றை விரும்பினால் அவர்களுக்கு ஏதேனும் துனபம் போனற ஒனறை ஆககுவான். பிறகு அவ்வடியவர்கள் தம் துன்பம் நீக்கும்படி ஆண்டவனை வேண்டித் துதித்தால், அதனை நீக்கி அருளல் அவனது திரு விளையாட்டாகும். அவ்வாறே நம் பாம்பனடிகளுக்கு ஒரு சமயம் வெப்பு நோய் கண்டது. இதுவும் வேறபரின் திருவருள் என்று கருதி, அடிகளார் "குமாரத்தவம்" என்ற நூலை 1918ம்

---

தொட்டால் சிணுங்கியை வெட்டாது தொட்டஉளி ;
தட்டினல் வெட்டும்;அது தொழிலாளர், செய்கையே.

ஆண்டில் பாடியருளிக் குமாரபிரா னருளினாலே தமது . வெப்பு நோய் நீங்கப் பெற்றார்.]

நூற்பயன் :—இந் நூலைப் பாராயணம் செய்பவர்கள் நோய் நீக்கம் பெறுவரென்பது இதன வரலாற்றிலிருந்து உணரத் தகும்.

## 6. பாம்பனார் நூற்களின் பண்பு :

பன்னிருகைப் பரமனை ஆறாயிரத்து அறுநூற் றறுபத்தாறு பாமாலைகளால் அணிசெய்தவர் பாம்பனடிகள. அவைகளிற் சில தேங்காய் போன்றவை. கடினமான ஓடுகளைப் போக்கி உண்ணுவதைப்போல் கடினமான சொற்செறிவு கொண்டு விளங்கும். சில கரும்புபோல் நன்றாய் மென்றபின் சுவைக்கத் தகக ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டவை. பின்னும் சில, தோலை யுரித்து உண்ணக்கூடிய (வாழைப்பழம்) கதலி பாகமாக அமைந்தவை. மற்றுஞ் சில, வாயில் அபபடியே இட்டுச் சுவைதது விழுங்க வல்லதான திராட்சா பாகமாக ஆக்கப் பெற்றுளளவை. ஆயினும் இதில வரும் ஒவ்வொரு அடியும் அரிய கருத்துககள் நிறைந்த கருவூலமாகும். மேலும் ஆறுமுகத் தண்ணலை மலர்தூவி வழிபடும் அர்ச்சனைக்கும் இந் நூல் மிக மிகப் பயனபடும். அநேக சபைகளில் குமாரஸ்தவ அர்ச்சனை நிகழ்ந்து வருவதும் யாவரும் அறிந்ததே. இந் நூலின விளக்கம் அடுத்த இதழில் காண்போம்.

---

ஏவலரை ஊக்கினால், எவ்வேலையும் நடக்கும்
நாவலர்கள் அந்த நயமுணர்ந்து கொண்டுளரே.

## அகத்தியர்

[தென்மலைய முனிவர்க்கும் (பகீரதற்கும்) அடியேன்]

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)

முன்னொரு காலத்தில் உலகுக்கு எல்லாம் அன்னையாகிய தேவியை "நீ இமயராஜனுடைய அருந்தவப் புதல்வியாய்ப் போதி" என்று சிவபிரான் கட்டளை இட்டனர். அங்ஙனமே தேவியும் சென்று இமயராஜன் புதல்வியாய் வளர்ந்தனள். மணப்பருவம் உற்றனள். இமயராஜன் சிவபிரானை வணங்கி, "அத்தனே! தமியேனது தவப்பயனாய் வந்த வித்தகியை தாங்கள் மணம் செய்து அருளவேண்டும்" என வேண்டினன். இறைவனும் அவ்வேண்டுகோளுக்கு இணங்கினார். திருமண நாளும் குறிப்பிடப்பட்டது. மூவர், தேவர், இயக்கர், நாகர், சித்தர், முனிவர் முதலியோர் பெருமானது திருமணத்தைக் காண இமயமலையைச் சார்ந்தனர். இமயராஜனும் அவர்களை உபசரித்து வரவேற்றனன். சிவபிரானும் முழவு முழங்கச் சின்னங்கள் ஆர்ப்ப இமயமலைக்கு எழுந்தருளினார்; அவர் வரவை அறிந்த பருவதராஜன் முன் வந்து, இருகை கூப்பி, முகமன் இயம்பிப் போற்றி செய்து, "என் உயிர்க்குயிரே! வருக வருக" என எதிர்கொண்டழைத்தான். பெருமானும் மணப்பந்தருக்குட் புகுந்து, சிங்காதனத்தில் அமர்ந்தனர்; பருவதராஜன் புத்திரி பார்வதி கலியாண கோலச் சிறப்புடன் இறைவன் பக்கலில் அமர்ந்தனள; அப்போது கூடியிருந்த பெருங்கூட்டத்தின் காரணமாக வடதிசை தாழ்ந்தது. தென் திசை உயர்ந்தது. அதுகண்டு தேவர் முதலியோர் அஞ்சினர். அந்நிலையைக் கண்ட பெருமான் அகத்திய முனிவரை அழைத்து, "இந்நிலை நீங்குதற்கு வேண்டி நீ உனது பத்தினியுடன் தென் பால் தமிழ் நாட்டிற்குச் செல்வாயாக; அப்போது பூமி சமநிலை பெறும்" எனக் கட்டளை இட்டனர். இதைக்கேட்ட அகத்தியர் இருகரங் குவித்து நின்று, "பெருமானே! உனது திரு

---

அருள்உள்ளம் வேண்டும்; அன்புமொழி வேண்டும்;
மருளர் தமைத்திருத்த மதிசினமும் வேண்டும்மே.

மணக் கோலத்தைக் காணும் பாக்கியத்தை என் கண் கொடுத்து வைத்திலதோ'' என வருத்தத்துடன் விண்ணப்பித்தனர். இதைககேட்ட பெருமான், 'அன்ப! தெற்கே தமிழ் நாட்டிற்குச் சென்று அங்குப் பொதிகை மலைமீது வீற்றிருப்பாயாக; எமது திருமணக் காட்சியை நாம் உனக்கு அங்குத் தருவோம்'' என்றனர் அப்போது அகத்தியர், ''பெருமானே! நான் முத்தமிழின இலக்கணத்தை அறியேன்; ஆதலால் அவ்விலக்கணத்தை அடியேனுககு அருளபுரிக'' என்று இரந்தார். பெருமான முத்தமிழின இலக்கணம் அனைத்தையும் நீ நமது குழந்தை வேலமுருகனை அடைந்து அறிந்து கொள்வாயாக'' என மொழிந்தார். அகத்தியரும் நனறென வணங்கித் தமது பததினி லோபா முத்திரையுடன் வடக்கிருந்து புறப்பட்டு கேதாரம் முதலிய பல தலஙகளை வழியில் தரிசித்துப பொதிகை மலையைச சேர்ந்தனர். அப்போது வடதிசையும் தெனதிசையும் சமநிலை பெற்றன. முனிவர் பொதிகை மலையில் வந்து தங்கியதை அறிந்த சேர, சோழ, பாணடியர் மூவரும், பிற சிற்றரசர்களும் முனிவரைக் கண்டு வணங்கினர்; ஆங்கு இராவணன் வந்து முனிவருடன யாழ இசையில் வாதிட்டுத் தோற்றனன்; நாரதர், வசிஷ்டர் முதலிய மாதவர்கள் வந்து முனிவரைத் தொழுது சென்றனர் முனிவரும் தாம் விரும்பிய படியே சிவபிரானுடைய திருமணக் காட்சியை ஆஙகுக் கண்டு களித்தனர். பின்னா முததமிழின் இலக்கணம் அறிய வேணடித் தணிகைமலை முருகனைத் தொழுது வணங்க, முனிவர் பொதிகை மலையினின்றும் புறப்பட்டுக குற்றாலம் வந்து சேர்ந்தார். அநதத் தலததிலுள்ள திருமாலைத தரிசிக்கச் சென்ற போது அஙகிருந்த திருமால் அடியார்கள், ''நீர் சிவனடியார். உம்மை இந்த ஆலயததுள் விடோம்'' என அவரைத் தடுத்தனர். அகததிய முனிவர் உடனே இலஞ்சி எனனும் தலத்தை அடைந்து குமரவேளைப் பணிந்து, தாம் அடைந்த தடையினைக் கூறி, அக்குற்றாலத தலத்தை சிவஸ்தலமாக்கும் வழியினை அருளுக எனக்கூறி வணஙகினர். முருகவேள், ''அன்ப! நீ நாரணன அடியார் கோலத்தைக் கொண்டு குற்றாலத்திற்குச்

---

மெய்யர்தம் தோல்வியிலும் மெய்பபண்பு மேவலுறும்;
பொய்யர்தம் வெற்றியிலும் பொய்ப்பண்பு தோனறுமே.

செல்க. அப்போது திருமால் அடியார்கள் உன்னை வரவேற்று உபசரிப்பார்கள், உன் கொள்கையும் ஈடேறும்'' என்னும் ஒரு தந்திர வழியைக் காட்டினர். அங்ஙனமே அகத்தியரும் குற்றாலத்திற்குச் செல்ல திருமால் அடியார்கள் அவரை அன்புடன் எதிரேற்றனர். முனிவர் அவர்களின் சம்மதத்தைப் பெற்றுத் திருமாலைத் திரையிட்டுப் பூசித்துத் திருமாலின் சிலையினைக் 'குறுக குறுக குற்றால' எனக் கூறி அச்சிலையினைக் குழைத்துப் பரசிவ லிங்கமாகச் சமைத்தனர். இதை அறிந்த திருமாலின் தாசர்கள் அவரோடு போர்செய்ய அவர்களை வென்று அவர்களுக்கு நல்லறிவு ஊட்டி அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பரங்குன்றம் என்னும் தலத்தைத் தரிசித்து, மதுரைத் தலத்தை அடைந்தனர். அவர் வருகையை அறிந்த பாண்டியன், அடிகளே வருக! ஐயரே வருக! அகத்திய முனிவரே வருக! படிபுகழ் பெரியீர் வருக'' என்று எதிரேற்று இறைஞ்சி உபசரித்தனன். முனிவர், அங்கயற்கண்ணி யம்மையையும், சொக்கநாதரையும் தரிசித்து வணங்கி, மதுரையிலிருந்தும் புறப்பட்டுச் சோழ நாட்டை அடைந்து சிதம்பரம் ஆதிய தலங்களைத் தரிசித்துத் தொண்டை நாட்டை அடைந்தனர். அச்சிறுபாக்கம், திருவூறல், (தக்கோலம்), காஞ்சி, திருவொற்றியூர், காளத்தி முதலிய தலங்களைத் தரிசித்துத் திருத்தணிகையை அடைந்தனர். தணிகை மலையைக் கண்ணுற்றார்; சிவிகையை விட்டு இறங்கினார்; கரமலர் சிரமிசைக் கூப்பினர், தெண்டனிட்டு வணங்கினார்; நந்திநீர் குடைந்தனர்; திருநீறு அணிந்தனர்; கண்டிகை பூண்டனர்;

'' அரகர என்றனர் முனிவர்கள் பெருமான்
அன்பர்கள் வேலமயில வேலமயில் என்றார்,
உரகர் நடுங்குற ஆர்த்தன முழவம்
உததி ஒடுங்க ஒலித்தன சின்னம்,
மரகத மாமயில் மேலவரு முருகன்
மலரடி சரணஞ் சரணெனப் போற்றிக்,
கரமுகிழ்த்த தினிது நடந்தனர் இதனைக்
கண்டனர் தணிகையில் வாழ்பவர் பலரும்.''

---

நமக்குவந்த நோய்களை நாம்சகிப்ப தன்றித்,
தமக்கென்று தாங்குபவர் தாரணியில் இல்லையே.

உடனே முனிவரை வரவேற்க அவ்வூரார்,

"பைம்புனல் ஆட்டினர் வீதி அனைத்தும்
பந்தர் அமைத்தனர் சந்திகள் தோறும்,
கம்பம் நிறுத்தினர் வானம் அளாவக்
கன்னலும் வாழையும் பூகமும் நாட்டி,
வம்பவிழ் பூவலர் தொங்கல் செறிந்த
மாவிலைத் தோரணம் தூக்கினர் கவின,
உம்பர் வியப்புற ஏற்றனர் அம்மா
ஒகை எலாம் அருள் சேவலின் துவசம்"

"மனைகளை மெழுகினர் குத்து விளக்கு
வைததனர் வாயில்முன வாழைகள் நாட்டிப்,
பனை இளங் குலையிள நீர்க்குலை தூக்கிப
பசசிலைப் பந்தர் அமைததனைச சுற்றிப்,
புனைமலா மாலைகள் தொஙக விடுத்துப்
பொறபுறு பூரண கும்பமும் வைத்தார்,
இனையன செயதனர் ஒக்க எழுந்தார்
ஏழ்கடல உண்டவர் தமைஎதிர் கொளவே". பின்னும்

"வரிசைகள் தாஙகி நடபபவர் ஒருசார்
மஙகல ஆலம் எடுபபவர் ஒருசார்
அரிபொரி வெல்லம வழஙகுநர் ஒருசார்
ஆநநத நிர்ததனம் ஆடுநர் சார்
முருகன அரும்புகழ பாடுநா ஒருசார்
முழவொடு சின்னம் முழக்குனர் ஒருசார்,
இருகை குவித்து நடப்பவர் ஒருசார்
இனனன வாக எழுநதனா முனிவர்"

(சேய்த்தொண்டர் புராணம் 124-127)

இங்ஙனம் உபசரிக்கப்பட்ட முனிவர் மலையடிவாரத்திலுள்ள குமார தீர்த்தம் எனனும் சரவணப் பொய்கையில் நீராடி, ஓராண்டளவு குமரவேளின் திருவடித தாமரையைத் தியானித்துத தவநிலையில் இருந்தார். அவருடைய தவத்திற்கு இரஙகிக் கந்தவேள்,

---

கற்றோர்ககு நுண்பொருள் காண்பிக்க வேண்டும்; அதை மற்றோர்க்கு கூறின, மதிப்பு குறைந்திடுமே.

" செஞ்சரணச் சிறுசதங்கை கலக லென்னத்
திருவரையிற் பொன்னரைஞாண் பளப ளென்ன
அஞ்சலென்ற அபயகரத் தணிகள் கொஞ்ச
அகனமார்பில் அணிமணிப்பூண் அழகெ றிப்பக்
குஞ்சிரிப்புக் கொண்டசெவ்வாய்ப பவளந் துன்னக்
குளிர்நளினத திருவிழியிற் கருணை பொங்க
விஞ்சுசெவிக் குண்டலங்கள் திருவில் வீச
வெண்ணீற்றின ஒளிநுதலில வெயில் பரப்ப
நவமணிகொள சுடிகைதிரு முடியின மீது
நவகோடி இளங்கதிரின் நகைஇ லங்கச்
சிவகுமரன் அருளுருவக் கலபத் தேரிற்
செயசெயவென றமரர்மலர் மாரி தூர்ப்ப

[செ. பு. 131, 132]

முனிவர்முன் எழுந்தருளி, அன்ப! நும் தவங்கண்டு மெச்சினோம். நுமக்கு யாதுவேண்டும்" என வினவினர். அகததியரும் " பெருமானே! தமிழின் பஞ்ச இலக்கணமும் கணிதமும் நாயேனுக்கு இனிதருள வேண்டும், மெய்ஞ்ஞானமும் வழங்கியருள வேண்டும்" என விண்ணபபித்தனர். பெருமானும் அவர் கேட்ட வரங்களை நல்கிப, பிணிகளை நீக்கவல்ல மூலிகைகளின் விவரங்கள யாவையும் விளக்கியருளி, முனிவரைத் தமிழ்மொழிக்கு* முன குரவனுக்கி மறைந்தனர். இங்ஙனம் அருள் பெறற அகததியர் தணிகை மலையினிருந்தும் நீங்கித தமது இருபபிடமாகிய பொதிகை மலைககுப புறப்பட்டனர். வழியில குனறககுடி, பழநி ஆகிய தலஙகளைத் தரிசித்தனர். குனறக்குடியில மலைவலம் வந்து முருகவேளைப் பூசித்து, " தனமம் வேண்டிலன் தனிவிசும் பாண்டு மீள் வதனால் பொன்னை வேண்டிலன முப்பகை கொணடு போதலினால்

---

*இதனை " சிவனைநிகர் பொதியவரை முனிவன் அக மகிழ இரு செவிகுளிர இனிய தமிழ் பகர்வோனே." "குடமுனி கறக அன்று தமிழ் செவியிற் பகர்ந்த குமர" எனவரும் திருப்புகழ்ப் பாக்களாலும் [49, 1084] "வாமன முனிக்கொரு தமிழத் த்ரயமும் அபரிமிதமாக விவரித்த கடவுட் புலவன்" எனவரும் பூத வேதாள வகுபபாலும் அறியலாம்.

மின்னை வேண்டிலன் யௌவனம் அகறலின் ; மேலோய்!
மன்னு நின்பதம் வேண்டினன் வழங்கிட வேண்டும்."

[மயூரகிரிப் புராணம் - அகத்தியச் சருக்கம்.]

[தருமத்தை நான் வேண்டுகின்றேனில்லை. ஏனெனில் விண்ணுலகு ஆண்டபின்பு நான் மீண்டும் (இப்பூமிக்கு) வர வேண்டியிருக்கும் ; பொன்னை வேண்டுகின்றேனில்லை. ஏனெனில் அது (தாயத்தார், கள்வர், அசுரர் எனனும்) முப்பகையால் அழிவுபடும் ; பெண்ணை வேண்டுகின்றேனில்லை, யௌவனம் நீங்குமாதலின். முருகா உனது திருவடியையே வேண்டுகின்றேன். அப்பேற்றினைத் தந்தருளுக.] என வேண்டி விரும்பின வரத்தைப் பெற்றனர். பழநியில் முருக வேளைப் பூசித்துப் "பெருமானே! திருத்தணிகையில் அடியேனுக்கு அருளிய இனதமிழுதன கூற்றை விரித்தருளுக" என்று விருமபினர். பெருமானும "நீ தெரிந்திடென்று விரித்தெலாம் நிகழத்தி.. உணர்த்தினர். [பழநிப் புராணம் - அகத்திய சருக்கம். 50] இஙஙனம் தமிழின முனகுரவனும் தலைமைததானம் பெற்று முனிவர் பொதிய மலையை அடைந்தனர். ஆங்குத தமது பன்னிரு மாணுக்கரும் தம்மைச சூழ்நது போற்ற, முடிவேந்தர் மூவரும் வநது வநது தம்மை பணிந்து போற்றத் தமது பத்தினியுடன வீற்றிருந்தருளினர்.

இம்முனிவர் பெருமானுடைய பெருமை இரண்டாயிரம் நாப்படைத்த ஆதிசேடனாலும் கூறமுடியாதெனின, நலமிலாப் பாவி எனது ஒரு நாவால சொலலுதற்கு இயலுமோ? சொன்ன எலலாம் ஆசை உந்த என்க எனப் புராண ஆசிரியர் அஞ்சி ஓதி முடிக்கின்றனர் அகததியர் புராணத்தை.

அகத்திய நாயனார் வரலாறு முற்றும்.

---

குலமதிப்பும் செலவமும் கூடவரா ; மெய்ம்மைப
புலனடக்கம் ஒன்றே, புதுக்கும் தவத்தையரோ.

## அரிதாகிய மெய்ப்பொருள்

(கி. வா. ஜ.)

முருகன் தன்னை நம்பி வாழ்கிறவர்களுக்குப் பல வகை யாலும் நலம் செய்கிறவன். மெய்ஞ்ஞானத்தை அருளுகிறவன். ஞான உபதேசத்தைச் செய்யும் குருவின் அருள் கிட்டினால் தான் ஒருவன் உய்யமுடியும். குரு இன்றி ஞானம் உண்டாகாது. ஆதலின், இறைவன் அருளினும் குருவின் திருவருளே பெரி தென்று கூறுவர்.

பொதுவாக யாவர்க்கும் குருவின அருளால் மெய்ஞ்ஞானம் கூடவேண்டும். ஆனால் சில அவதார புருஷர்களுக்கு இறை வனே குருவாக வந்து உபதேசம் செய்வான. வாயில்லாப் பானையில் நீர் நிரம்புவது போலத் தன் அருள் நிரம்பும்படி செய் வான். ஞானசம்பந்தா அந்த வகையில் ஞானம் பெற்றவர். ரமண மகரிஷிகளும் குருவின்றி ஞானம் கைவரப பெற்றவர். அருணகிரிநாதப் பெருமானும் முருகனே நேரில் உபதேசம் செய்ய ஞானம் பெற்றவர். அதனால் தான அவர் தாம் பாடிய பாடல்களில பல இடஙகளில முருகனைக் குரு வென்றே சொல் கிறார். அவன தமககு உபதேசிததான என்றும் பாடுகிறார்.

" தேனென்று பாகென் றுவமிக்கொ ணாமொழித்
தெய்வவள்ளி
கோன்அன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு
கூறவற்றே
வானன்று காலன்று தீயன்று நீரன்று
மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று
சரீரியன்றே "

என்பது முதலிய பாடலகளால் இதை உணரலாம். கந்தர் அநு பூதியிலும்,

" மகமாயை களைநதிட வல்லபிரான
முகமாறு மொழிநதும் "

---

உயிர்சிதைப்பார், ஊனுண்பார் உள்ளறிவு மங்கும்;
பயிலுகின்ற பாவம், நரகம் பயங்கரமே.

"கூகா எனஎன் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா

என்று வருவதை முன்பே பார்த்தோம்.

முருகன தமக்கு உபதேசம் செய்ததனால் பெற்ற பேறு களையும் அங்கங்கே சொல்கிறார். அப்படி அமைந்த பாடல் ஒன்றை இப்போது பார்க்கப் போகிறோம்.

உலக வாழ்வில் இன்றியமையாதது பொருள். அது ஓரிடத்தில நிலையாக நில்லாதது. ஆயினும் அது இல்லையானால் வாழ்வு வளம் பெறுவதில்லை பொய்ப பொருளே ஆனாலும் அதன மெய்மமையை உணர்ந்து முயற்சி செயகிறவாகள் அதற்கு அடிமைப படாமல அதன் பயனைப் பெறுவார்கள.

பொருள் இன்றி மிடித துனபததில சிக்கி உழல்பவர்களின் நிலை மிகக கொடியது. இதறகு முந்திய பாட்டில் மிடி என்ற பூாவி வெளிபபட்டால எலலாம் இழந்து விடும் அவல நிலை வரும் என்று சொன்னார். மிடித துன்பத்துக்கு மாற்றுப் பொருள், அது இறைவன அருளால் கிடைக்கும். ஆதலின், மிடிக்கு மருந்தாகிய பொருளை வேண்டுபவன் அதை வைத் திருக்கும் மககளை நாடாமல, இறைவன திருவருளை நாட வேணடும். நோய வந்தவர்களுக்கு மருந்து வேணடுமானால் மருநதை வேண்டிக் கொண்டு பயன இல்லை; அது ஜடம். மருநது நுகரும பிற நோயாளிகளை இரந்து பெறுவதில பயன் இலலை; அவர்கள எளிதில தரமாட்டார்கள். மருததுவனிடம சென்று வழிபட்டுப பெறுவது தான முறை. அவன எவ்வளவு மருநது வேண்டுமானாலும் தருவான. ஆதலின மிடியின் துயரை முருகனிடம் முறையிட்டுக கொண்டார். அவன மிடியைப போககித பொருளைத தருவானா என்ற ஐயம் உணடாகுமாயின், அதறகு விடை இறுபபாரைப போல, "இந்தப் பொய்ப பொருளை வழங்குவது அவனுககு ஒரு பொருளா? மெய்ப் பொருளைத தன்னை அடைநதாருககும் வழஙகும் வள்ள லாயிற்றே!" என்று சொலல வருகிறார். மெயப் பொருளை வழஙகுவான என்பதைப பிறரிடம் தெரிநது கொணட நான

---

சண்டை நடுவில் சமாதானம் செய்வார்க்கு,
மண்டை யுடைவதுவும் மாநிலத்தில் கண்டோமே.

சொல்லவில்லை; என்னுடைய சொந்த அநுபவம் இது " என்று சொல்கிறார்.

அவர் தாம் பெற்ற மெய்ப் பொருளை, " அரிதாகிய மெய்ப் பொருள் " என்கிறார். உலகியலில் நலம் தரும் பொருளோடு ஒப்பு நோக்கினால் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு நன்கு புல னாகும். இது எளிதாகிய மெய்பபொருள். பலர் வறியவர்களாக இருக்கிறார்களே, பொருள் எப்படி எளிதாகும் என்ற கேள்வி எழலாம் பொருளைப பெற்றவர்களிடம் அது குவிவதைக் கண்டால், அவருடைய முயற்சியளவு சிறிதாக இருப்பதும், பொருளளவு பெரிதாக இருப்பதும் காணலாம். அறிவு, ஆற்றல் இல்லாதவர்களிடத்தில பொருள நிரம்புகிறது அதனால் தான திருவள்ளுவர்,

" அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கணணும் உள "

என்றார். மாளிகையிலும் காரிலும் ஆடையிலும் அணிகளிலும் மிடுக்குப் பேசசிலும் வணஙகாத தோறறததிலும் இந்தப் பொருள எஙகும் காட்சி அளிக்கின்றது. ஆதலின் அதனை எங்கோ அருமையாகப் பார்ப்பதற்குரிய பண்டம் என்று சொலல வொண்ணாது.

எளிதிற் பெறுவதோடு அது பொய்ப் பொருளாகவும் இருப்பது. பொய என்பது நிலையாமையை உணர்த்துவது. பொருள் நிரம்பப் பெற்றவன ஒருவனிடம் அது எப்போதுமே இருக்கும் எனறு சொல்ல இயலாது. அது சகடக்கால் போல வந்து போவது. ஆறிடும் மேடும் மடுவும் போல் குவிந்து நீங்குவது.

அருணகிரியார் பெற்ற செல்வமோ மெய்ப்பொருள். அது ஒருமுறை பெற்றவனிடமிருந்து எனறும் நீஙகாதது; அதனால் தான் அது மெய்ப் பொருளாயிற்று. அந்த மெய்ப்பொருள யாது? அது தான் மெய்யுணர்வு அலலது மெய்ஞ்ஞானம். ஞானததினும் சிறந்த செலவம் வேறு இலலை. கைபபொருளைக் காட்டிலும் சிறந்தது கல்வியாகிய மெய்பபொருள் என்று சொல

---

உணர்ந்து பிறர்கது உறுதுயரம் செய்யாமை,
மணந்த மதிநலத்து மாதவர்தம் மாண்பாமே.

வார்கள். அது பெற்றால் பெற்றவனை விட்டு நீங்காமல் எழுமையும் தொடர்ந்து வரும் என்பார் திருவள்ளுவர்.

" ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப புடைத்து "

இந்தககல்வி நூலறிவைத் தருவது. அபரஞானத்தை உண்டாக்குவது. இதைவிடச சிறந்தது பரஞானமாகிய மெய்யுணர்வு. பொயப பொருளைப பெற்றவன் மிடியினால் வரும் துயரினின்றும் விடுபடுவான. மெய்ப்பொருளாகிய பரஞானத்தைப் பெற்றவன பிறவிப பிணியினின்றும் விடுபடுவான. மிடி என்பது உடலையும் உளளத்தையும பற்றி அலைக்கும் நோய். பிறவி எனபது உயிரையே பறறி வருத்தும் நோய் ஆதலின மெய்ப் பொருள பெறறவனுக்கு உடம்பே இராமற் போகும் போது, மிடி வந்து என செய்யும்?

பிறவிப் பிணிக்கு மருந்தாகிய மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் இவ்வுலகில் பரம சாந்தியுடன் வாழ்வார்கள். அவர்கள் இம்மை மறுமைகளில் நிரம்பிய வாழ்வு பெறுவார்கள். பொருளின பயன் நிரம்பிய வாழ்வுதானே? குறைவிலா நிறைவாகிய இறைவனுடைய திருவருளால மெய்யுணர்வாகிய மெயபபொருளைப பெற்றவர்களும் குறைவிலா நிறைவை மாறுதலினறிப பெற்று என்றும் வாழ்வார்கள்.

இததகைய மெய்ப பொருளை நமக்கு உரியது ஆக்கும் வழியைக் குருநாதன உபதேசிப்பான. அருணகிரியாருக்கோ முருகனே அந்த வழியை உபதேசித்தான. அவன உபதேசத்தில் ஒரு சிறப்பு இருக்கிறது. பிறர் உபதேசம் செய்தால் நாம் முயன்று மெயப பொருளைத்தேடி அடையலாம் அதை நமக்கு உரியதாகப் பெறலாம். அருணகிரியார் அததகைய முயற்சியையும் செய்யவிலலை. அவர் மெய்ப்பொருளை நாடிப் போகவில்லை. அது தானாக அவரை வந்து அடைந்ததாம். இதை நயமாகச் சொலகிறார் அருணை முனிவர்.

" அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதே சமுணர்த் தியவா!"

---

பகையெழா வண்ணம் பயிலுமனம், தூய
சுகவாழ்க்கை நலகும்; இது மக்கட்குத் தோன்றுதோ.

என்கிறார். உரிதா - உரிய பொருள் ஆகும்படி. 'மெய்ப் பொருளை எனக்கு உரியதாகும் படியாக உபதேசம் உணர்த் தினான்' என்று சொல்லவில்லை. 'எனனை மெய்ப பொருளுக்கு உரிய பொருளாக உபதேசம் செய்தான என்கிறார்.

ஒரு நிலததை ஒருவன் தனக்கு உரியதாககிக் கொள்ள வேண்டுமானால, அவன அந்த நிலம் உள்ள இடத்துக்குச சென்று வரம்பறுத்துத் தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டும். அதற்குரிய முயற்சியை அவன செயய வேண்டும. அதுபோல் மெய்பபொருளை அடைய வழிகண்டு தேடி அடை வதே பெரும்பான்மையான வழககம். ஒரு பெண்ணை ஆடவன் தானே முயன்று தேடிச சென்று அவளைத தன மனைவி யாக்கிக் கொள்வது போன்றது இது.

ஆனால் அருணகிரியார் அநுபவமோ நேர் மாறானது. பெண்ணே முயனறு காதலனை அடைந்து அவனைத் தனக்கு உரியவனுக்கிக் கொளவது போனறது அது. மெய்ப்பொருள் தானே வந்து அடைந்து அவரைத் தனககுரியது ஆக்கிக் கொண்டதாம். இருநத இடததில் இருந்தபடியே சிவஞானம் கிடைத்ததாம். இதறகுக காரணம் முருகன திருவருள். இது வியப்பதற்குரியதலலவா? பழம் தானே வநது வாயில் விழுவது போலவும், ஆறு தானே வநது நம்மை நீராட்டுவது போலவும் அமைந்த வியததகு செயல் அல்லவா?

அதனால், "இபபடி எமபெருமான எனக்கு உபதேசம் உணர்ததியவாறு என்ன வியபபு!" எனறு விம்மிதம் அடை கிறார். சாவியைப் பெற்றவன அதனை எடுததுக் கொண்டு பெட்டியுள்ளவிடம் செனறு அதைத் திறந்து உள்ளே உள்ள பொருளைக் கைக்க கொள்வது இயல்பு. அநதப பெட்டி அவனிடம் வந்து தானே திறநது கொண்டு பொருளைக் கொட் டியதென்றால் பேராசசரியம் அல்லவா?

இப்படி விளைவதற்கு எனன காரணம்? முருகனுடைய பெருங்கருணைதான. அவனே நேரில் உபதேசிததததனால் விளைந்த அற்புதம் இது. "நான் அவன அடியவன என்ற உணர்வு தலைப்பட்டு முறுகியது. இந்த உறவைப் பற்றுகக

---

இசசையெனும் அம்பு, இதயத்திற் பாய்நதுகொலும்;
அச்சமிலா வாழ்வு அறவாழ்வு கண்டாமே.

கொண்டு அவன் அருளியவாறு இது" என்பதை உணர்த்த 'அடியேன்' என்றார்.

"அரிதா கியமெய்ப் பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த் தியவா!"

[கிடைப்பதற்கு அரிதாகிய மெய்யுணர்வாகிய சிவஞானத்துக்கு அடியேனை உரியவனாகும்படி எனக்கு முருகன் உபதேசம் உணர்த்தியவாறு எனனே!]

அவன் தந்த அநுபவத்தில் கரைந்து செயலற்றமையின், தம்மை உரித்தாக என்று அஃறிணை வாய்பாட்டிலே வைத்துச் சொன்னார். அநுபவ நிலையில் நிற்கும்போது திணைகடந்த நிலையில் இருப்பது ஆன்மா. ஆனமாவை உயர்திணையில் சொல்வது வழக்கம் இல்லை ஆதலின், ஆன்மாவில் இயைந்த அநுபவத்தைச சொல்ல வந்தவர், உரிதா எனறு அஃறிணையாகச சொனனார்.

உபதேசத்தை உணர்த்தியதாகக் கூறுகிறார். உபதேசத்தைச் செவியிலே கேடகும்படி உரைப்பதுண்டு. இங்கே ஆன்மாவிலே அநுபவம் விளையும்படி நிகழ்த்தினான முருகன் என்பதையே உணர்த்தினான எனறு சொன்னார்.

---

தேவி தாஸர்கள்—27.

## தாம்தாம் செய்த வினை

(ரஸபதி)

வாழ்க அந்தணர்; வளர்க தவநிலை. உய்க உலகம் என்று, ஓயாது துவஷ்டா உருவேற்றுபவர். உணர்வு உருக்கொண்டது போல, அவாககுப பிறந்தது ஒரு பிளளை. அவன பெயர் விஸ்வரூபன்.

ஐந்தாம் வயதில் கல்வி ஆரம்பம். வரவர வித்தை வளாநதது. படித்தவைகள் உளத்திற பதிநதன. அதன பயனாக, விஸ்வரூபன், வீணான போககுகளை வெறுததான். உலகநிலை எனறும் கலகநிலை. இதை உணர்ந்தான். அதனால்,

---

தனக்கென்று வாழ்ந்தார் தரித்திரராய்ப் பிறக்க,
பிறர்க்கென்று வாழந்தார், பெருஞ்செல்வர் ஆயினரே.

ஒட்டி எவருடனும் உறவு பூண்டிலன். வசதி பல இருந்தும், தரையிற் படுத்தான். தனித்து இருந்தான்.

பல நூற்களைப் படித்தேன். வாசா கைங்கர்யம் அன்றி, அந்நூற்கள் என்னை அறிவிக்கவில்லையே! நான் யார்? நான் ஒரு ஆன்மா. இவ்வுடலைத் தந்தவர் யார்? என்னை இதனுள் புகுத்தியது எது? ஏட்டில் படித்தேன். அனுபவம் இல்லை. சுற்றி இருள் உயிரைச் சூழ்ந்துளது. அதனுள்தான் தெய்வம், யான் அறியுமாறு இல்லை இதையும் அந்த நூற்கள்தான் அறிவித்தன உயிர் உருகும் வாளபோல், நாள்கள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. என்னை யறிய, இறைவனை உணர, என்ன செய்யவேண்டும் நான்? சிறக்க இப்படியே பலநாள் சிந்தித்தான். ஒரு முடிவிற்கு வந்தான். தந்தையை அணுகினான். வணங்கி எழுந்தான்.

அப்பா! என்னை நான் அறிய வேண்டும். தவந்தான் அதற்குத் தக்க வழி. உத்தரவு கொடுங்கள். நினைவு நிறைவேறிய பின் வருகிறேன் என்றான்.

விஸ்வரூபா! அவசரப்படாதே! அன்பின் ஆரம்பம் அகல். ஆர்வம் அதில வார்க்கும் நெய். திகழ்ந்து உருகும் உள்ளம் திரி. ஊன்றிய அத் தெய்வ வழிபாட்டில், இத்தீபம் உருவாகும். அவ்வொளியில் கலைஞானம் வழிகாட்ட, அவ்வழியே பரஞானம் பலிக்கும். அதன்பின் அறிய வேண்டிய செய்தி, உலகம் உயிர் இறை எனும் முப்பொருள் அனுபவம். இதை நீ மேற்கொண்டு இரு.

தலை சிறந்த ஞானிகள் செய்வது தவம். ஆரம்பத்தில் நாம் அதில் தலையிடுவது தக்கதல்ல. தவத்தில் வரும் சோதனைகளை, நாம் தாங்க முடிவது இல்லை. வாயாரத் தவசிகளை வாழ்த்துவோம்; வணங்குவோம் அந்த அளவு போதும். புனித இறை வழிபாடு, நம் நிலைக்கு நலம்!

அப்பா! ஆரம்பத்திலேயே தடுக்காதீர்கள! நான் வருகிறேன் என்று, விஸ்வரூபன் வணங்கினன். உடனே புனித ஒரு காடு நோக்கிப் புறப்பட்டான். அரிய ஒரு இடத்தில் அமர்ந்தான்.

---

மனக்கோணல் இன்றி மறையவருக் கீந்தார்,
இனக்கோணல் இல்லா உயர்பிறப்பை எய்தினரே.

வீராசனம் இட்டான். அடங்காப் பொறி புலன்களை ஒடுக்கினான். உலகை மறந்தான். தவத்தில் இருந்தான். அதன பயனாக, தர்ம சத்தியம் தழைத்தது. புனித ஒளி முகத்தில் பொலிந்தது.

* * * *

அவன் நிலையை இந்திரன் அறிந்தான். இத் தவத்தின் பயனாக, எதிர்காலத்தில் இவனே என பதவிக்கு உரியவன் ஆவன. என் கதி அப்போது என்ன ஆவது ? என்று, எண்ணி நெஞ்சம் இடிந்தான.

இவன் தவம் குலைய வேண்டும். இனறேல் இவன் இறக்க வேண்டும். இரண்டில் ஒனறு நிகழ வேண்டும். கற்பக நாட்டுக் காவலன எனும் அந்தஸ்தைக் காக்க, ஏதாயினும் ஒன்று செயயததான வேணடும் எனறு துணிந்தான்.

இந்திரன பிரபுவா யிருககலாம் ; கோழையான அவன், இதயத்தால இப்படி ஏழையாயினன. குறுகல் புத்தியால், ஏதமான சூழ்ச்சியில இறஙகினன. நினைவின் தீமையால, அவனது பொனனிற மேனி, கன்னங கறேல எனறு கறுத்தது.

அழகின் கொழுந்தான அணஙகுகள், மின்னற் கொடி போல விண்ணி விருநது இறங்கினர். வீணை இசைததனர். மோகன கீதம் பாடினர். கால தூக்கி ஆடினர். கண்போன வழி கை, கைபோன வழி கண, இப்படி நாட்டியப் பெயரால் சேட்டைகள் செய்தனர். நெடு நேரம் முயனறும், மாறவிலலை விஸ்வரூபன் மனம். புலன வென்ற அவன் திறம் கண்டு, பூவையா நாணினர். புறஙகாட்டி ஓடினர். தொடர்ந்த இந்திர சூழ்ச்சி, ஆரம்பத்திலேயே தோல்வி அடைந்தது.

குமைந்த அறிவு குழம்பியது. பொருபொருத்தான். விறுவிறுதது விரைநதான். எடுதது வஜ்ஜிராயுததததை எறிந்தான. தவம் கிடந்தான தலை, அறுந்து நிலத்தில் உருண்டது. ஐயோ! தநதை சொலலை மறுத்து வந்த தநயன, இக்கதியையா அடைய வேண்டும்! அடபாவமே.

ஒழிந்தது தொலலை. என்றும் பதவி என்னதே எனறு இநதிரன இறுமாந்தான.

---

தனக்கு உதவினரைத் தானபகைத்தல், ஏறும்
இனக்கிளையை வெட்டிவிழும் ஏழைமதி ஆவாரே.

தவசியைக் கொன்ற பாவம், இருள் வடிவாகி இந்திரனைச் சூழ்ந்தது. அதனால் இருண்டது அவன் முகம். அவன் செய்த வினை, அவனை விட்டு அகலுமா என்ன?

என் மகனையா? இந்திரனா? கொன்றனா? ஐயோ பாவீ! எரியுதடா என் வயிறு இந்திரா! பழி! பழி! விடமாட்டேன் இந்திரா! உன்னை விட்டிடவே மாட்டேன் என்று துவஷ்டா, துள்ளித் துடித்தார். விழுந்து புரண்டார்; விம்மி யழுதார்.

எழுந்தார். எட்டு நாள்வரை, அபிசார ஓமத்தை எழுப்பினார். அதர்வண மந்திரங்களை, உருத்துக் கொதித்து உருவேற்றினார்.

அதன் பயனாக, ஒரு மைந்தன் உதித்தான். அவனுக்குத் துவஷ்டா, தன் ஆக்க சக்தியை அளித்தார். விருத்திரன் என்று பெயர் வைத்தார். அருந்தவ ஒளி நீ என்று ஆசி கூறினார். பலவித வித்தையிலும் பயிற்சி யளித்தார்.

தவத்தாலும், தோள் பலத்தாலும், மந்திர வலத்தாலும் விருத்தித்த விருத்திரனை, ஆர்வங் கொண்டு அணைத்தார்.

அப்பா! உனக்கு ஒரு அண்ணன் இருந்தான். தவம் செய்யும் காலத்தில், அவன் தலையறுத்தான் இந்திரன். அதை எண்ணும்போது என்னெஞ்சம் இடிந்து சரியுதடா என்று, பொருமி துவஷ்டா புலம்பினர்.

அப்படியா செய்தி! என்று, விருத்திரன் அதிர்ந்தான். எந்தையே! விண்ணவர் தலைவனை விடேன்! இன்றே தேவர்கட்கு இடிபுடை எழுப்புவேன் என்று எழுந்தான், பொல்லாத உக்ரத்தொடு புறப்பட்டான்.

* * * *

அவன் ஆக்ரமித்து வருவதை இந்திரன் அறிந்தான். கலகலத்துளது தன் காலபலம். வருபவன் ஒருவனே ஆயினும், அவன் அகில உலகையும் அடக்கி ஆளும் ஜாதகன்.

குரு முதல்வரே! இப்போது என்ன செய்யலாம் என்று, பிருகஸ்பதியை இறைஞ்சினன்.

---

அருத்துபால் உண்ணு(து) அழும்சேயை, அன்னை
வருத்தி ஊட்டல்போல், வலிந்துபுத்தி சொல்வாயே.

அருந்தவ முனிவனை நீ அழித்த பாவம், இன்னும் ஏதேது செய்யுமோ ?' என்று, அவரும் கண்ணீர் சிந்தினர்.

* * * *

எதிர்ப்புறத்தில் தீ எழுகிறது. அந்தரம் அதிர்கிறது. விரிந்த நிலப் பரப்பில் பல இடங்கள் வெடிக்கின்றன. குய்யோ முறையோ என்ற குரல்கள், எங்குமாகி எழுகின்றன.

இந்திரப் பயல் எங்கே? எங்கேடா அந்த இமையவர்கள் என்று, குரூரமாக விருத்திரன் கொக்கரித்துக் கொண்டு வருகிறான். அசுர ஆவேச அவனது வேக வருகைதான், இந்த உற்பாதத்திற்குக் காரணம் என்று, இந்திரன் அறிந்தான்.

பெருகி வரும் வெள்ளத்தை, அணையிட்டுத் தடுப்பது அந்த நேரத்தில் ஆகாது. அதனுடன், தன் உடலும் மனமும் உலர்ந்துளது. இப்போது ஓடி ஒளிவதுதான் உத்தமம் என்று உணர்ந்தான். மாபெரும் உலகில், தன் உருத் தெரியாது மறைந்தான். உம்பர் பலரும் அப்படியே உருக் கரந்தனர். திரிகரணத்தாலும் தீமை செய்தவர்கட்கு, இறுதியில் நேரும் கதி இதுதானே!

* * * *

ஹஹ் ஹா ஹா ஹா! என்று, நால் திசையும் அதிர, விருத்திரன் நகைத்தான். பொன்னுட்டைக் கைப்பற்றினன். என்னதே அரசு என்று இறுமாந்தான். நிலவுலகம் அடைந்தான். நடந்ததைக் குறிப்பாகத் தந்தையிடம் கூறினன்.

உயிர்க்கு அஞ்சி ஓடினன் இந்திரன் என்ற அளவில், துவஷ்டா ஆறி மனம் தேறினர்.

* * * *

ஓடிய இந்திரன், தேவர்களுடன் மந்திர மலையில் மந்திராலோசனை நடத்தினன். விருத்திரன் அசுர ஆவேசகன் தந்தை தந்த தவபலம்; வேள்வியில் விருந்து விளைந்த பலம்; இந்த இரண்டும் உடைய அவனை, இன்றைய உலகில், வெல்ல வல்லவர் இல்லை. தந்திரத்தால் அவன் தலையையும் தள்ள வேண்டும். அப்போதுதான் நம் தலைமை தங்கும் என்றான். இந்திரன் சூழ்ச்சி யந்திரம் சுழன்றது.

---

தாய்ப்பாச மேஇயற்கை; தாவும் பிறர்பாசம்,
வாய்த்த நலமெண்ணி வந்ததென ஓர்ந்தோமே.

வெளுத்த சடையினர் ; தொங்கும் தாடியர். விபூதி உருத்திராகக மேனியர் சில முனிவர்கள், விருத்திரன் முன் வந்தனர்.

வர்வேணடும் என்று விருத்திரன், அவர்களை வணங்கினன். வந்த அவர்கள், அவன் புகழை அளவிலாது பாடினர்.

என்ன செய்ய வேண்டும் அடியேன் ?

விருத்திரா ! வள்ளலான உன்னிடம் ஒரு வரம் வேண்டி வந்தோம் !

என்ன வரம் வேண்டும் ?

கொடுப்பதாக ஆணையிடு ! அதன்பின் கூறுகிறோம்.

எதுவாயினும் தருகிறேன ! தைரியமாகக் கேளுங்கள் !

வள்ளலே ! கலைகள பலவும் கற்றேம், அமைதி யடைய வில்லை மனம். நெடுங்காலம் வாழ்விக்கும் அமுத கலையை அறிய, ஆவலிததேம் ! உரிய அதை எஙகட்கு உபதேசித்தருள்!

அப்படி ஒரு கலை இருப்பதை நான் அறியேன் ! அதை அறிந்திருப்பவர் யார்? அறிவித்தால், நானும் அதை அறிகிறேன; உஙகட்கும் அறிவிக்கிறேன.

இந்திரன் அககலையை அறிநதவன ; உனக்கு அஞ்சி அவன் எஙகோ ஒளிநதுளன் !

அப்படியா செய்தி !

அவனும் நீயும் நட்பா யிருந்தால், அவன உன் யோக ஞானததை அறிவன் ; அவனது அமுத கலையை நீ அறிவை ; உன மூலம் நாங்கள் உணர்வோம்.

என அண்ணனைக் கொன்றவன் என்ற ஆததிரம், என்னைவிட்டு இனனும் நீங்கவில்லை. எவர் அழிந்தாலும் பிழையில்லை; ஒருவரிடம் உளள வித்தை, அவரோடு அழிவது கூடாது. அகில உலக தேவதைகள்மேல் ஆணை. அவனைக கொலல மாட்டேன் ; அவனை எஙகிருந்தாலும் அழைதது வாருங்கள் என்று, விருத்திரன் விநயமொடு கூறினன. அப்படியே செய்வம் எனறு, அவர்கள் அங்கிருந்து அகன்

---

கோழி மிதித்ததலை குஞ்சிற்குச் சேதமஇரா
வாழவிடும் தக்கோர்கள், வைதால் வருநதுவதோ.

றனர். கந்தர்வர்கள், முனிவர்கள் உருவில் வந்தனர் என்று, அவன் எபபடி அறிய முடியும் ?

* * * *

அஞ்சி அஞ்சி, மறுநாளே இந்திரன் அணுகினன். கண்ட விருத்திரன் நகைத்தான. பயபபடாதே இந்திரா! இப்படிவா ! அக்கினி சாட்சியாக, நாம் இருவரும் இனி நட்பா யிருப்பம். இருவர் வித்தையையும் பரிமாறிக் கொள்வம் என்றான்.

நாளை பௌர்ணமி நாள். அமுத கலா வித்தையை, நாளையே உனக்கு அறிவிக்கிறேன் எனறான் இந்திரன்.

அன்று இருவரும் அளவளாவி இருந்தனர். இவ் விவரம் அறிந்த துவஷ்டா, விரைந்து வந்தார்.

மகனே ! உன பரந்த நோக்கததைப் பாராட்டுகிறேன். எனினும், உன் பரம்பரைக்கே அவன் பகைவன ; அவனை நம்பாதே என்று கொஞ்சிக் கெஞ்சிக் கூறினர்.

அப்பா ! என்னைக் கண்டு உடலாடக் குடலாடும் இவனை, மேலும் ஐயுற வேணடா ! வீண் அச்சத்தை விட்டுவிடும் என்றான் விருததிரன.

விதி வலிது. அதைத் தடுக்க எவரால் ஆகும் ? எதற்கும் எசசரிக்கையா யிரு எனறுர் துவஷடா.

* * * *

அன்று நள்ளிரவு. விருத்திரன் உலகை மறந்து உறங்கு கிறான. காலம் பார்த்திருந்த இந்திரன, அடிமேல் அடி வைத்து அணுகினன. விருத்திரன் தலையை வெட்டி வீழ்த்தி னன.

துரோகி ! எனறு வீரிட்டுக் கூவி, உயிர் விட்டான விருத் திரன். பாதக அக் காரியம், பிரமத்தியாய் வந்து இந்திரனைப் பாதித்தது.

இறந்தவன சாயை எழுந்தது. பதைத்து வந்து இந்திர னைப் பற்றியது. தந்தை சொல்லை மறுத்தேன். நட்பிடை

---

அடகுவைத்த பூமிபோல், ஆன்றோர்கள் மங்கி
அடங்கி யிருந்தாலும், ஆனமஒளி குன்றாரே.

வஞ்சம் செய்த நாசகாரா! உய்வாயோ பாவி! நீ உய்வாயோ என்று, அதிர்த்து உருத்தது அச் சாயை.

அதன்பின், பொல்லாங்கு செய்த இந்திரன போன இடம் தெரியவில்லை. பாவத்தைச் செய்து உயிர் பரிபவம் அடையும்; மறுபடியும் அதை மறந்து, வளரும் கனமத்தை மென்மேலும் தொடருமாறு செய்து கொள்ளும்; இந்த அநியாயத்தை யாரிடம் சொலலி ஆறுவது?

* * * *

கங்கை மணலை எண்ணினாலும் எண்ணலாம்; இந்திர பதவியில் இருநதவரை மட்டும் எண்ண முடிவது இல்லை. இதை எணணிப் பார்கக நேரம் இலலாமல்தான, இந்த இந்திரன எவ்வளவோ தவறுகள் செய்தான். அழிவு நினைவுகள் அவனுக்கு அவதியையே விளைவித்தன.

தலைவன இல்லாமையால் சுவர்க்கம், தடுமாறியது. நில வுலகில நூறு அஸ்வமேத யாகம் செய்த நகுடன, அபபோது இநதிர பதவி எய்தத் தக்கவனாக இருநதான. அவனைத தேவா கள அழைத்தனர். பதவியில் அமர்ததினர். மகுடம் புனைந் தனர்.

அரியணை ஏறிய நகுடன் மனம், இந்திராணியையே எண் ணியது. உத்தம அவன் மனமுமா இபபடி ஊசல ஆடியது? என்ன செய்யலாம்; இந்திரன செய்த பாவங்கள, நகுடனுக்கு இத் தவறான எண்ணததை எழுபபியது. எங்கே இநதிராணி? அவளிடம் எனனை அழைத்துச செலலுங்கள எனறான.

இது தவறு. நிலவுலகில் உனது மனைவி யிருக்கிறாள். முதனமை வாழ்நாள் முடிந்ததும், இந்திராணியாகி அவள் இங்கு வருவாள். இன்று இங்கு இருபபவள், பழைய இந்திரன் பார்யை. அநாதி தருமத்திற்கு மாறான காரியம், அபாயகரம் என்று, ஆயிரம் வகையில அமரர் அறிவு கூறினர்.

பொன்னுலகம் எனனுடையது. எப்பொருளும் என உடமை. பெயர்கு ஏற்ப, இந்திராணி என அடிமை. மறுத்துப் பேசாதீர்கள என்று, கொதிதது நகுடன் குதித்தான்.

---

சானறோர் வறுமையினால் கீழோரைச சார்ந்தாலும்,
ஆன்ற ஒளிமணிபோல், ஆர்ந்திருப்பர் உண்மையிதே.

யோசிப்பும். சிறிது அவகாசம் அளியும் என்றனர் இமையவர்.

எவ்வளவு பெரிய பதவி! அந்த அருமை யறியாத எவ்வளவு அற்ப புத்தி! பதவியை மதிக்க வேண்டா; சிற்றறி வுடைய உயிர்தானே இன்ப அப் பதவியில் இருக்கிறது! அதன் சுபாவம் போகுமா என்ன?

இச் செய்தியை இந்திராணி அறிந்தாள். புனித குரு விடம் அடைக்கலம் புகுந்தாள்.

அம்மா! முன்னைப் பிறப்பில, உன் கணவன் முதல்வியை வழிபட்டான். அதன் பயனாக, இப்பிறப்பில் இந்திர பதவியை எய்தினன். செல்வப் பெருமிதம் செருக்கை அளித்தது. அதனால், ஆக்க சக்தியின் அனுக்ரகம் அழிந்தது.

இன்று முதல் நீ இறைவியை வழிபடு! அதனால், உன் கணவனுக்கும் நன்மை. பரதேவதை, உன்னையும் பாதுகாப் பள் என்றார்.

அன்று முதல் இந்திராணி, அம்பிகையை உள்ளம் உருகி ஆராதித்தாள். ஒருமை வழிபாடு, தேவிக்கு உவகையை அளித்தது.

பெருமித தேவி ஒரு நாள் பிரசன்னம் ஆயினள். உள் ளம் குளிர்ந்தது. உடலம் பூரித்தது. தன் வசம் அழிந்தது. பரவசமபிறந்தது. எழுந்தாள். இறைவி திருவடியிலவிழுந்தாள்.

அம்பிகே! சர்வ அபீஷ்டையே! சம்சார சாகர தோணியே! பகவதி! உமது திருவடிகட்கே அடைக்கலம் என்று, இந்திராணி அலறினள்.

மகளே! தான்செய்த தவறுகளை நினைதது, உன் கணவன் எலும்பும் தோலுமாகி இளைததான. இமயத்தில் உள்ள மானச தடாகத்தில், விஸ்வகாமை எனும் எமது திருவுருவை அன்பு டன் இன்று ஆராதித்துக் கொண்டு இருக்கிறான். கண்ணீரைக் காணிக்கை யாக்கிய அவன் பாவங்கள், அந்த அளவில் கரைந் தன.

அங்கே போ! அவனைப் பார் என்று அருளினள் அமலை; அவ்வளவில், அவளது கருணைத் திருவுருவம் அந்தரத்திற் கலந்தது. குவித்த கரங்களால் கும்பிட்ட இந்திராணி, எம்

---

பொல்லாங்கு கண்டு பொறுக்கும் புகழினரை,
வல்ஒளிசார் மேலோர்கள், மனமார வாழ்த்துவரே.

பிராட்டி அறிவித்த இடம் எய்தினள். அங்கு கறுத்து இளைத்துப் போன உருவமாயுள்ள கணவனைக் கண்டு, கதறி அழுதாள்.

வருந்தாதே தேவி! தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பர். இது எனவரையில உணமை ஆயது. உலகம் என வரலாற்றின் மூலம் இதை உணரும்.

புனித இறைவி திருவடிகளே எனக்குப் புகலிடம். செல்வப் பதவி அறிவுக் கண்ணை அவிக்கிறது. அதனால் இது வரை ஆயிரமாயிரம் தவறுகள செய்தேன. ஏழையின வாழ்வில் இவ்வளவு இடிபுடை இலலை; அம்பிகை சந்நிதி எனக்கு அமைதியை அளிக்கிறது எனறுன.

இந்திரா! எனறு ஒரு குரல். ஏறிட்டு நோக்கினன. பிருகஸ்பதி எதிரில் இருக்கிறார்.

விரைந்தான. மனைவியுடன வணங்கினுன். சப்த ரிஷிகள் சாபத்தால நகுடன், மலைப்பாம்பாகி மண்ணில் விழுந்தான். இன்று முதல் நீ பொனனுலக பூபதி எனறார் குரு.

ஸ்வாமி! பதவி வேட்கையால் அடியேன் பட்டது போதும். தேவதேவியைத் தொழுது துதிப்பன்; இங்கேயே இருப்பன; எனனை விட்டுவிடுங்கள் எனறுன் இந்திரன்.

அதுதான் சரி இறைவியை வழிபடுவம; இங்கேயே இன்புற்று இருப்பம் எனறாள இந்திராணி.

அமலையை எஙகும் ஆராதிக்கலாம்; இயற்கை தந்த பதவியை விட்டுவிட, உனககு உரிமை யிலலை; அது தெய்வம் தநத பிரஸாதம எனறார் குரு.

விதியின்றி இணங்கிய இந்திர தம்பதிகள், அதனபின பொனனுலகத்தைப பழையபடி புரந்தனர். ஓய்வுள நேரமெல்லாம் அனனபூரணியைப் பலகாலம் ஆராதிதத பயனுக, ஒரு நாள அத் தேவியின அருளினப நிழலை யடைந்தனர்.

பாம்பான நகுடன், வளர்தத தன் தவறுககு வருந்தினுன். சதா சாம்பவியை ஆராதிததான. பாபசாபம் அதனுல பறந்தது. பிறகு தன துணைவியுடன் இந்திரபதம் எயதினன். இறைவியை வழிபட்டான்; மற்றவரையும் வழிபடுமாறு செய்தான். அதன் பயனுக இன்பம் கணடது இமையவர் உலகம்.

வாழ்க தேவிதாசர்கள்!

ஓம்.

## COSMOS AND LIFE

The cosmos has been the wonderland of humanity. It seems to be fed by the eternal waters of life, the origin and end of which is beyond human ken. The eternity of space and time into which human life seems to be thrown, rouses the insatiable curiosity of the thinker, the devotee and the scientist. The primordial cause has been sought to be contacted. Where intellect has failed, heart has succeeded. Where learning has failed, intuition has succeeded. Where differentiation has failed, attunement has succeeded. Life has been pictured as a whirl, but it is a whirpool in the ocean of eternity and not a whirlwind of destruction. Life has been enjoyed as the means by which limited man can contact the endless ocean of joy. The eternal has no beginning and no end; nor has the perfect globe. The appeal of the Tamil saints, no less than the real teachings of the Sastras, invites man to convert the distressing whirl of life into the moving expanse of love and service.

—*Thiruppugal Mani.*

கேட்(டு)ஆரும் அறியாதான்; கேடுஒன்று இல்லான்;
சிளேயிலான்; கேளாதே எல்லாம் கேட்டான்;
நாட்டார்கள் விழித்திருப்ப, ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு, நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப், பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்(து.) என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்(து)ஆட் கொண்டான்,
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே.

No. 1506
ASOKA
நெ. 1506

Regd. No. M. 5390 Amirthavachani (1961 ஆனி-அமிர்தவசனி 13-3


# Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




**குடை மார்க் பினாயில்**
(சிறந்த கிருமி நாசினி)
*தயாரிப்பாளர்:*
**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 2519
*விநியோகஸ்தர்கள்:*
**கார் & கம்பெனி**
129, மூர் தெரு
சென்னை-1. டெலிபோன்: 2058


**அமிர்தவசனி சந்தாதார்கட்கு வேண்டுகோள்:**
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைந்தபடியால், தயை கூர்ந்து பிலவ வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம் வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.**

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65. Tirupalli Street, Madras-1.